உ

வேலுமயிலும்துணை,

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள

மஹாவித்வான்

ஸ்ரீமான் - சங்கரதாஸ் சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவரான

சந்தச் சரப

ஷண்முகதாஸவர்கள்

இயற்றிய

# பக்தி ஆனந்தக் கேலிப்பதங்கள்.


இ. இராமசாமிக் கோன்,

புக்ஸெல்லர், பப்ளிஷர் & ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்,

வடக்காவணிமூலவீதி, மதுரை.

விலை] 1928 [அணா 5



*Registered Copy Right.*



# சிறப்புப் பாயிரம்.

## நிலைமண்டில ஆசிரியப்பா

பண்டைக் காலோர் பலகையி லிருந்து
கண்டுத் தமிழோர் கழக மியற்றி
முதலும் இடையும் முன்னிய கடையும்
இதமுறு மூன்று மினமஃ தாகப்
பாண்டிய வரசர் பரிபா லிப்பான்
தாண்டவ மாடிய தனிமுதற் கடவுள்
குமரர கத்தியர் குலவுதொல் காப்பியர்
கமழ்கலை யாய்ந்த கபிலர் பரணர்
பல்லோ ரேத்தும் பனம் பாரனார்
கல்லா டர்காக் கைப்பா டினியார்
பதிமுடி நாகன் பகர்மா மூலர்
நிதியின் கிழவன் நிகழவி நயனார்
கற்றைச் சடையார் கழறு பாவிலும்
குற்றங் கூறிக் குலவு நக்கீரர்
சீவரு ளாய சீத்தலைச் சாத்தர்
தேவரு ளாய திருவள் ளுவனார்
ஆதிய பலரா மங்கத் தவரும்
சாதன மாய சங்கத் தார்ந்து
முன்னூ லேற்ற முறையாம் வழியே
தொன்னூ லாம்பல் தொகுதி வகுத்த
அமிழ்தினு மினிதா மருங்கலை யாய
தமிழென் தெய்வம் தங்கி மலிந்து
சிவபர னாலே திருவிளை யாடல்
அறுபது நாலும் ஆடிய கூடல்
பதியின் கண்ணே பதியை வணங்கிக்
கதிபெறு மாறு கருணை புரிந்து
சந்தச் சரப ஷண்முகப் பேரான்
தந்த திஃதெனத் தாங்கும் புவியே.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழ் வித்வான், மதுரை.

கன்னிச்சமீன் - சரபம்

உடுமலை ஸ்ரீ: முத்துச்சாமிக் கவிராயர் அவர்கள்

இயற்றியது.

---

விருத்தம்.

பூங்கோயில் மதுரா புரிக்குளிது வரையாம்
பொருந்துளம் புளக மாகப்
புனைசெவிப் புலன்மலர நனியிசைப் பனுவல்கள்
புகன்றபேர் பலர்தம் மினும்

ஈங்கோ ரிரும்பூது பாங்கோத மதுரித்
திடுஞ்சீனி தேனி லருமை
இட்டுமுக் கனிபிழிய வுற்றதென வவதார
மிவனென்ன வந்து தித்தான்

தாங்கோகை மாதவன் சரிதசுகிர் தன்பார்த்த
சாரதி குமார திலகன்
தமிழ்வளமை தருகீர்த் தனங்கள்சுய கமனந்
தடைபடாச் சந்த லோலன்

ஆங்கோல நாடகத் தழகரசர் பழகவுய
ரனுபவா னந்த சரபம்
அதிகீத நிபுணசண் முகதாஸ புத்திமான்
அமலன்மகிழ் பத்தி மானே.

கட்டளைக் கலித்துறை.

பார்த்தனங் கோடியிங் கோடியெல் லோரையும் பத்திரஸக்
கீர்த்தனங்கோடி பகர்ந்தானுந் தன்னுட் கிளர்ச்சிமிக்கோன்
வார்த்தனங் கோடிணை யென்பார் மதனன் வழியுணரெ
தார்த்தனங் கோடி புனைசண் முகதாச னைமெய்ப்பரே.

உ

சிவமயம்.

சந்தச்சரப

# ஷண்முகதாஸவர்கள்

## இயற்றியபக்திரஸகீர்த்தனங்கள்

என்னும்

# பக்தியானந்தக் கேலிப்பதங்கள்.

## விநாயகர் துதி.

### வெண்பா.

தித்திக்குந் தேன்தமிழால் சீர்கேலித் தோத்திரமாம்
பக்திரஸ கீர்த்தனங்கள் பாடுதற்கு—சித்தம்பெண்
ஆத்தாளைப் போல்தேடி ஆற்றங் கரையமர்ந்த
மூத்தானே காவா முயன்று.

### கலித்துறை.

எட்டாத ஏகவி நாயகன் தாளென்னு ளெட்டுதற்குக்
கட்டாத வைம்புலக் கால்கட்டி மும்மலக் கட்டறுத்துக்
கிட்டாத பேருரு தாராக் கடைவீதி கிட்டிச்சென்றால்
முட்டாத மோனமும் ஞானமு மேவந்து முன்னிற்குமே.

2. பாராமுகமேனையா என்றமெட்டில் கண்ணி மகுடம்.

இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாணேவயிற் ருணேமுகனே பாசாங்குசனே (பா)

அநுபல்லவி.

பத்தியருள் வித்தகனே சித்தர்புகழ் உத்தமனே (பா)

சரணங்கள்.

பருவரை யெனுங் கிரியரைநொடி
விரைவுறவலங் திரமுற வரும் (பா)

எப்படிப்பிழைப்பே னிப்படிக்குள்
தப்படுத்திருக்குறே னொடிக்குள்
அற்புதத்தருள்வை சொற்படிக்குப் (பா)

இதந் தருக வருக
விதங்கிருபை பெருக
பதந் தருக உருக (பா)

இதுவாதுருது விதமேதுவோது
கெதியேதுசாது பதியீதுதீது (பா)

சித்திரத்தை யொத்தபுவி மத்தியிலி ருத்துவது
மெத்தவும் பிரமித்ததெனக் கித்துயர்வகுத்ததெது (பா)

ஏனோவென் மீதிலுனக் கிப்படியான வர்மம்
காணேசண்முகனுன்னை நாடிப்பணிந்தின்னுமர்மம் (பா)

## 3. சரஸ்வதி துதி.

### வெண்பா.

கண்டார் சுவைகொள் கரும்பே கலாவலியே
தண்டா மரையுறையு மெந்தாயே—தொண்டாகி
ஞானம் புகழ்கல்வி நானடைய வேபக்தி
யானந்த மோனமரு ளாய்ந்து.

---

## 4. எஜீத்தாதர்ப்பத் தோரி என்ற இந்துஸ்தான் மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்கவாய்-தாளம்-ஏகம்.

### பல்லவி.

தாமரையில் வீற்றிருக்குந் தாயே
தவிக்கிறேன் நின்சேயே (தா)

### அநுபல்லவி.

மாமறைபுகழுகின்ற மாதா நீ வருவாயே-சிறு
மைந்தன் நாவில் வந்திருந்து மதிதருவாயே (தா)

### சரணங்கள்.

ஏதுக்கு நீ பிறந்தாய் சிறு ஏழையெனை மறந்தாய்
வாதுசெய்யச் சிறந்தாய் கெடு வஞ்சகத்தில் நுழைந்தாய்
இப்படியானவர்மம் உனக் கேற்காதிந்தமர்மம்-என்மேல்
இரங்குவை நீ தர்மம் வைத் தேற்பதுவே கர்மம் (தா)
யாழ்ப்பாணமென்ற பூமி என தாசான்சரவணச்சாமி
வாழ்வாம்ஷண்முகன்தேமி நினைவணங்கினேனருள்நேமி ()

---

## 5. விஷ்ணு துதி.

### வெண்பா.

உறிவெண்ணெய் வைத்திருடி உண்டிளம் பெண்கள்
எறிமத் தடிகொண்ட ஈசா—அறியேனுய்
ஓர்கேலித் தோத்திரப்பா ஓர்ந்திங்குரைப்பதற்குச்
சீர்பாலித் தாழ்வாய் சிறந்து.

---

## 6. சஞ்சலமாய் நெஞ்சமிக உடைந்தேனே என்ற மெட்டு.

### இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

### கண்ணிமுடுகு.

கூத்தாடிக்குப் பெண்கொடுத்த குரங்காட்டி-உங்கள்
குலங்கோத் திரமெல்லாம் வெறுங்கோட்டி
ஆத்தாடியுன் தங்கையரோ பேயோட்டி
அவள் மகன் மூத்தவனே காதாட்டி
கொஞ்சமுனெஞ்ச மிரங்கிடவில்லையோ
சஞ்சலமாய உலகென நில்லையோ (கூத்)

நீயு முன்னம் ஆயர்மனை மாடோட்டி - குகன்
நின்மருகன் ஷண்முகனே மயிலோட்டி
நேயமைத்துனன் பரமன் பிணம் வாட்டி-நித்தம்
நித்தம் சுடுகாடிருப்பான் தலை காட்டி
நேர்த்தி யோவிது கீர்த்தியோ ஒப்பாய்
பூர்த்தியோமனச் சீர்த்தியோ செப்பாய் (கூத்)

இப்படியுங் கெட்ட குலங் கண்டதில்லையே-நான்
எப்படிச்சொன்னாலுங் காதி லேறுதில்லையே-இதை
இப்புவிகொண் டாடுதற்கோ வழியில்லையே-இனி
எடுத்திங்கு சொல்வதென்றால் பெருந்தொல்லையே

எம்பெருமானே நம்பினேனானே
வம்பிது தானே உம்பர் சீமானே (கூத்)

வித்தகன் சண்முகனுரை சித்தங் கேட்டு- எந்த
விதத்திலும் வன்மமென்மேல் விட்டுப் போட்டு- மனச்
சுத்தமாய் எனை யாளவே அருள் காட்டு-இந்தத்
தொல்லுக வாழ்விலுறுந் துயரோட்டு

விந்தநேசா வை குந்தவாசா
பந்தநாசா நி றைந்தவீசா (கூத்)

---

## 7. மீனும்பிகைத் துதி.

### வேண்பா.

பாண்டியன் பேறே பரதேசி யைமணந்த
ஆண்டிச்சி யாளே அருள்புரிய—வேண்டினேன்
ஆறுதலை யானனையே யானைமுகத் தானனையே
ஆறுதலை நீயெனக்கே யாம்.

---

8: நான் சொன்னபடி கேளாய் என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

நல்ல-மகனைப்பெற்று வாழ்ந்தாயிந் நாட்டினிலே-ஓர்

அநுபல்லவி.

*ஏகனை முகனை யேயில் லாதுன் பாட்டினிலே நல்ல (ம)

சரணங்கள்.

அகமதிகமுண் டவனிடத்தினிலே-மன
தாரமோசக்கார னுமித்தடத்தினிலே
சுதமென்ன தானவனல் சுமந்துபெற்றுயேவீணல்
சொற்கேளாச் சுட்டி-ஊர்
சுற்றிவரக் கெட்டி-வலை
விற்பதிலோ செட்டி.எந்த
விதத்திலுமே வெட்டி-நல்ல (ம)

அம்மணி நீ பெற்றமக னறுதலைக்கோபி-அவன்
ஆரையு மதித்திடா தவனையோ பாபி
பம்மாத்துக்காட்டிநின்று பரத்தையர்வீட்டிற்சென்று
பார்க்கவே போறன்-ஒரு
வாக்கியங் கூறுன்-சன
யோக்கியம் பாரான்-பதி
நோக்கியுஞ் சேரான்நல்ல (ம)

* ஏகனைமுகனை—ஒழுங்கு. வழக்கச் சொல்.

கோபக்கார மகனுனக்குக் கொண்டாட்டமா-அவ
னுபத்துக் குதவாவிட்டால் திண்டாட்டமா
பாபத்திற்குட்படுவான் பாவையரால்கெடுவான்

பாலனு மவனும்- வடி
வேலனு மவனும்- அனு
கூலனு மவனும்- சூர
காலனு மவனும்- நல்ல (ம)

எந்தநேரமு மிரண்டுபெண்களை இனமாக்கூட்டி-அலையும்
இவனுக்கேனோ இடுப்பைச்சுற்றிலுங்காவிவேட்டி
விந்தையதாயிருக்கு வேண்டியவன்முருக்கு

விண்புக ழாளே—நிதம்
வேண்டினேன்தாளே— நின்
ஷண்முக னுளே—ஈன்ற
தாயே மீனுளே—நல்ல (ம)

---

## 9. சிவன் துதி.

### வெண்பா.

பித்தா சிரமீது பெண்ணைச் சுமந்தவனே
அத்தா திருநீ றணிந்தவனே—பத்திய
யான்பாடுங் கீர்த்தனத்தை யாதரிக்க வேண்டுகிறேன்
மேன்பாடு தந்தாள் விரைந்து.

## 10. சிதம்பர தேரிசனமா என்ற வர்ணமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

உடம்பெல்லாம் பாம்பெதற்கையா-பாம்பாட்டிகளு
ருராய்ப் பிழைக்கிறுரையா (உ)

அநுபல்லவி.

சடையும்முடியும்சுமை தாங்கிடுமோவிதனை
இடையிலுந் தொடையிலு மித்தனை இருப்பதென்னே
எதனுலே இந்தச் சுமையாலே
ஏதுமில்லா மற்பெருத்த வாதனைக்கி டங்கொடுத்த (உட)

சரணங்கள்.

கஞ்சாக் குடித்த வெறியா அடியவர்கள்
கெஞ்சிக் கிடக்க நெறியா
வஞ்சமோ மேனியெல்லாம் வாறிச்சாம்பற் பூசினுய்
மண்மீதி லிப்படிக்கு மய்க்கவந்த தென்வீணுய்
மதிமாறிப் பித்தஞ் சிரமேறி
மாலயன் வணங்குசித்தாய் கேலிக்கிட மாகவைத்தாய் (உட)

பெண்ணைத் தலையில் வைப்பதோ பக்தனுக்காக
மண்ணைக்கூடச் சுமப்பதோ
எண்ணெய் முழுக்கில்லாமல் ஏற்றசடை விரித்தாய்
கண்ணுன சந்திரனைக் காட்டியதில் தரித்தாய்
• காலமா இந்திர ஜாலமா
காரணம் இதற்கில்லையா ஆரணம் புகழுமெய்யா (உட)

ஓடும் பகைக்க வேணுமா உனைச்சுமக்கும்
மாடும் நகைக்க நாணுமா
கூடும்பிணங்கள்சுடு காடுகாப்பதைவிட்டு
ஆடும்பொருளேபாண்டி பன்கையடியும்பட்டு
அஞ்சினுய் உடன் கெஞ்சினுய்
ஆசையொடு சண்முகன்சொல் வாசகந்தனைச்செவிகொள் (உட)

---

## 11. முருகன் துதி.

வெண்பா.

தேவசேனைபதியே சென்றசுர ரைவதைத்து
மேவு கதிர்காம வித்தகமே—ஆவலொடு
நீடாருங் கீர்த்தனங்கள் நின்மீது ரைத்தனனெற்
கீடாக முத்தமிழு மீ.

---

12. மாதர்களைநம்பேலாது என்ற மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆருக்குத்தான் பிறந்தாயோ-வேலையா நீ (ஆ)

அநுபல்லவி.

ஆலமுண்ட ஈசனுக்கா மூலமறை நீயுரைத்தாய் (ஆ)

சரணங்கள்.

பாருலகாளன்பிதா பரமனுக்கைந்துமுகம்
பட்சமுள்ளவினது தலைமயனுக்கானமுகம்

கூறுகின்றானுன்மாமன் கோவிந்தன்சிங்கமுகம்
குலத்தைக்கெடுக்கவந்த உனக்கேனிவ்வாறுமுகம் (ஆ)

உலகைமயக்கும்பிதா உத்ராட்சம்பூட்டி
உனதுதமையனிரு யானைக்காதாட்டி
பலருமறிவர்மாமன் பட்டிமாடோட்டி
பக்குவமானநீபோ குறத்தியைக்கூட்டி (ஆ)

பத்மாசூரனுக்காகப் பயந்தோடியுன்தகப்பன்
பஞ்சவர்க்குள்ளடங்கிப் பதுங்கியுனதுமாமன்
சத்தியினதுமாதா சாதியோசெம்படவன்
தாசிக்குநீபோமுன்னந் தாள்வடங்கொடுத்தவன் (ஆ)

இப்படியாகவேதா னிருக்குதுஉங்கள்குலம்
இந்தக்கலியுகத்தில் இதுவுமொருகேவலம்
எப்படியுமென்றனை ஈடேற்றுவதுநலம்
இல்லாதுநீயோர்தெய்வ மிருந்தெனக்கென்னபலம் (ஆ)

தமிழிற்சிறந்ததிரு யாழ்ப்பாணப்பூமி
சங்கத்தில்பேர்பெற்ற சரவணச்சாமி
அமிதஉபதேசத்தை அடைந்தநல்வாமி
அறைந்தேன்சந்தச்சரப சண்முகநேமி (ஆ)

13. அந்தரத்து மின்னிறங்கி வந்ததுபோல் என்ற மெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

தட்டுமலர்ப் பிரமனைக் குட்டியே யடைத்துவைத்த
கெட்டிக்காரத் துரையல்லவா—உங்கள்ஜாதி
வெட்டவெளியாகச் சொல்லவா (தட்)

அநுபல்லவி.

வட்டோடெடுத்துப்பிச்சை வாங்கினேனுன்றன்பிதா
வழக்கமாயுன்மாமன் வெண்ணெய்திருடிசதா
முட்டுமானையைப்போலுன் அண்ணனிருக்கிறதா
முத்திகொடாவிடிலுன்னைக் கேலியாருஞ்செய்கிறதா (தட்)

சரணங்கள்.

பலபலரூப மானாள் பாரினனது தாயே
பாதைபதுபோல்வரும் பாவையீன்றவோர்சேயே
உலகில் சாம்பலைப்பூசி யோடித்திரிவாய் நீயே
உள்ளதைச்சொல்லவருஞ் சும்மாகில்லாதென்வாயே(தட்)

தாயொருமறக் குலம் தமையனோ மிருகக் குலம்
தந்தைக்குப்பிள்ளைபுத்தி சாற்றிடுவதோசலம்
நீ யொரு குறக்குலம் கின்மாம னிடைக்குறம்
நேரேயிப் படிக்கெல்லோரும் சொல்வதோமிகுந்தலம் ()

உத்தமகுலத்தனென் றொருவருரைப்பாரில்லை
உன்குலஞ்செப்பவென்றால் உண்டோவதற்கிங்கெல்லை
இத்துணைக்கேலிக்கிடம் எனக்கினைக்குத்தொல்லை
ஏற்றுக்கொள் சந்தச்சரப சண்முகன் தமிழ்ச்சொல்லை(நட்)

---

14. எப்படிச் சகிப்பேனினிமாமா என்ற மெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

பறக்குலப் பெண்களுனக்கில்லையா—இந்தப்
பாவத்தைக்கொண்டாயே இது தொல்லையா சொல்லையா()

அநுபல்லவி.

குறக்குலவள்ளி தன்னைக் காணமையலாகி நொந்து
கொண்டாயே வேடுவரூப முன்னமே-உங்கள்
குலத்துக் கெல்லாமிது வோர் பின்னமே
மறக்குலத்தி லுதித்த வரைக்குல மானதினால்
கிறுக்குப்பிடித்து உடல் சிறக்கமாவையுண்டாயே (பற)

சரணங்கள்.

பெண்டாட்டி யிரண்டுபக்கம் வேணுமா-தினம்
பிச்சைவாங்கிப் போடச் சக்தி காணுமா தோணுமா
கொண்டாட்டமேனுன்மதிப்புத் திண்டாட்டமாயிருக்கையில்
பண்டாரமே உனக்கென்ன பிழைப்பு—இரு
பாவையர்களா லேனிந்த உழைப்பு

கண்டார்சிரிக்காரோகினை காசினிபிலிதையெங்கும்
விண்டாகிலும் விட்டுவிடு வேண்டாமிந்த வேதனையே (ப)

காசில்லாமல் தாசியிடம் நடப்பதோ-அந்த
வேசியும்நின் தாள்வடத்தைப் பிடிப்பதோ-அடுப்பதோ
ஏசிவிட லாமென்றுநீ வீசிக்கையை யோசியாமல்
எப்படித் துணிந்து அங்கு சென்றயோ-அவள்
இழுத்துப் பிடிக்க வெட்கி நின்றயோ
நேசம்விடா தடியானும் பேசியபடி கொடுப்பேன்
யோசியாதே என்றுரைத்து ராசியாகப் பூசினும்முன் (ப)

அங்கத்தில்வெண் சாம்பலதைப்பூசி-நீ
அலைகின்ற தென்னுலகில் யோசி-கூசி
எங்கினு மூத்ராட்சமணி தொங்கவிட்டுன்திரேகமீது
இருக்கின்றதேனே சுமைதாங்கி—இதி
லேறுமோ உனக்குப்பெயரோங்கி
பங்கு பிரித்துக் கொண்டீரோ பரமனு நீயு மாகப்
பாவலன் சந்தச் சரப ஷண்முகனுரைக்கொப்பாகப் (ப)

---

15. இந்தவுடலை நம்பியிருக்கலாமா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கவாய்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தஉலகிலுன்னை யார்மதிப்பார்
இப்படிப்பெயர் பெற்றுலெவர் துதிப்பார் (இ)

## அநுபல்லவி.

சிந்தைய தாகப் பாடி
ஸேவித்திடக் கொண்டாடி
விந்தைய தாக நாடி
வேண்டும்பதத்தைத் தேடி (இந்)

## சரணங்கள்.

ஆறுதலை யென்பது மதிசயமே
அன்பர்க்கருள் செய்கிற குருமயமே (ஆ)

பாரினிலுனை யேசி
பழித்திடாரோ யோசி
கூறும் நீயோ சன்யாசி
கும்பிட்டேன் துதிபேசி (இந்)

தகப்பன்சாமி எனப்பேர் வாங்கலாமா
தரணிமீதிலுனைத் தாங்கலாமா (த)

அகப்பற்றி னாலே
அலையுமென் பாலே
வகையுற்றிக் காலே
வாமயில் மேலே (இந்)

இப்படிச் செய்வதுமேன் இது நீதியோ
எனைக் காவா திருப்பதுன்சம்மதியா (இந்)

எப்போதும் பராமுகம்
இருப்பதோ விவேகம்
செப்பிடுவாய் நல்யூகம்
சிறியேனுரை பாகம் (இர)

முத்தமிழ் வித்வசங்க மெனத்துலங்கும்
முழங்கு பாண்டிமாநகர் தனில்வழங்கும் (மு)

மூதுரை மறையாளா
முன்னுபன் னிருதோளா
சாதனைக்கி யானளா
சண்முகனின் தயாளா (இர)

நேரிலவனைப் பாராது ஊரைவிட்டு என்ற மெட்டு:

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்-கோபத்தாலே குற்றம் வைத்தேன்
பாபத்தைப் பெருக்க வைத்துக் குலைக்கவைத்தாயே
முத்து வேலையா (கோ)

அநுபல்லவி.

ஆபத்துக்குதவாமல் அலைவது மருமமோ
அடியவன் மீதிலுனக்கேனிப்படிவருமமோ
தாபத்தைத் தீர்ப்பதென்று னுக்கொருசிரமமோ
தமியன்முன்னுளிலேயே செய்தவர் திட்டகருமமோ
தர்மதுரையே யினைத்

தானேநம்பி னேன்புரிந்து கோனேஎன்னை யாளாய்வந்து
கேளென் குறையே தயாள நீதிமுறையே (கோ)

சரணங்கள்.

சாதனை யாகச்சத்தி வேலெதற்கெடுத்தாய்
சாமியென்மீதித்தகைச் சூதேனோ தொடுத்தாய்
வாதனை செய்யும் நமன் வழியினில் விடுத்தாய்

வம்புகள் தானே திரு

வையாபுரி ஐயாமுரு கையாமனத்
தய்யாவிது தெம்புகள் தானே-உனை
நம்பினேன் யானே (கோ)

ஆடு மாடு காடு கரை அதிகமானசோத்து
பாடுபட்டுத்தேடிவெகு பணத்தைஎடுத்துப் பத்து
வீடு கட்டிமேடை மீது வேண்டியிருந்தாலுஞ்செத்துக்
கூடுவிட்டிங் காவிபோகக் கூடவரா தெனவொத்துக்

கொண்டேன் தள்ளாதே-ஐயோ
கொஞ்சமும் வஞ்சகம் வேண்டாம்

தஞ்சமென்றேன் நெஞ்சிரங்கென்
பாபம் பொல்லாதே பின்பரி தாபமில்லாதே (கோ)

மைந்தனிடத்தில் வர மயிலுனக்கில்லையா
வள்ளி மயக்க முனை வரவிடவில்லையா
சந்தச்சரபஷண் முகனேழைஇல்லையா (கோ)

சரிகை கிரிகை யோக ஞான பதமெனக்கில்லையா
சாமி வேலையா ஐயா
சந்ததமு முன்றனையே சிந்தித்திடு மென்றனையே
தாங்கிக்கொள்ளையா புகழ் ஓங்கிலில்லையா (கோ)

---

## 17. சிவபிரான் துதி.

பஞர்கைஸி பகார்கைஸி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆண்பெண் அடங்கலும் பிச்சையா - அள்ளியிட
யாவர்க்கும் வச்சையா உனக்கிது
வேணுமென்ற இச்சையா - பிழைப்பதற்கோர்
வேலைசெய்ய லச்சையா (ஆண்)

தொகையறு

ஆளாளுக்கொவ்வொரு திருவோடுமேந்தியே அவனிபூராய்
நாளுக்குநாள் தவறாமலே வீடெங்கும் நாடிநேராய்
கூழுக்குங் கவிபாடி வயிறேம்ப வேஷித்தங்
கொண்ட வெறியா
தோளுக்குக் காவிது வைத்ததுணி போடநீ
சோம்பேறியா

பாட்டு.

பஞ்சத்தில் - பிச்சையுங் கொடுத்து - இப்பாரில்
படைப்பதா ரெடுத்து

சஞ்சல மாகுதிதைவிடுத்து - ஓர்தொழிலைச்
சார்ந்துசெய் அடுத்து (ஆண்)

தோகைரு.

குலகோத்தி ரங்கெட்ட தேதனாலே போவிங்கு
கூறுவது மிகவுஞ்சரி

பலகோத்தி ரத்தில் பிறந்ததால் பிள்ளைகள்
பார்வையில் பலமாதிரி

விலைமாதர் குடியினில் வீழ்ந்துமே கிடப்பதென்
வினையுனது இளைய புதல்வன்

நலமான தொழின்முறை இல்லாத நீயோவிங்
நானிலம் புகழுமுதல்வன்

பாட்டு.

நித்தங்கொண் - டாடும் புகழ் வாசன்-பக்தியில்
நீடிய நேசன்

சத்திதர்-பாதம் பணிபாசன்-வேண்டினேன்
சண்முகதாஸன் (ஆண்)

## 18. கண்ணபிரான் துதி.

செந்தா ழந்தேன் கமழும் என்ற மெட்டு.

பல்லவி.

வெக்கம் சிக்கம் மானமேனும்
வேண்டுவதில்லையோ கண்ணனே (வெ)

அநுபல்லவி.

பக்குவ ஆயர்மனை பால்தயிர் வெண்ணெய்தனைப்
பாகமாய்க் கண்டாய் ஏகமாய் மொண்டாய்
ஆகமொரண்டாய் வேகமாயுண்டாய் (வெ)

சரணங்கள்

சட்டியின் வெண்ணெய் கொட்டிக் கிடக்கச்
சகித்திடா தந்தக் கோகுலர்
கட்டியுரலிலுன்னை எட்டியடிக்கப் பின்னை
கதறித் துடித்தாய் கண்ணீர் வடித்தாய்
கஞ்சனை எத்தாய்க் கண்டு வதைத்தாய் (வெ)
சின்னஞ்சிறு கன்னிப்பெண்கள் சேலைமுழுதுந் திருடியே
புன்னை மரத்தினிலே போய்ப்புகுந் திடுமாலே
பூமியிலுன்னைப் போற்றுதலென்னை
சாமியென் றுன்னைச் சாற்றுதலென்னே (வெ)

துஷ்டன் துஷ்டன் கிருஷ்ணன் என்று தூற்றவு முடம்பேற்றனே
அஷ்டகாசமென்பாவம் ஆனதுனக்கென்லாபம்
ஐவருக்கிதம் ஆகப்பாரதம்
செய்தவநீதம் செப்பிற்பிரமாதம் (வெ)

காதகியாள் பூதகிவஞ்சக் கருத்தறிந்துயிர் கவர்ந்தவா
சாதனே தானேபிடி வாதமுனக்கிங்கேனோ
சந்தச்சரபன் சண்முகதாஸன்
சிந்தித்தே னின்றே செய்தருள் நன்றே (வெ)

---

## 19. முருகன் துதி.

### விருத்தம்.

திரிலோக சஞ்சார முனிநார தன்சொன்ன
தேன்மொழிய ணங்கு மீது
சித்தமது நிலைகொளச் செப்பரிய வேடனைச்
செப்பமா னென்று தேடி
அரிவையுங் குறமாது பரண்மீதி ருந்துநல்
ஆலோல மேதொ டுக்க
அங்ஙனஞ் சென்றந்த மங்கையொடு வாதாடி
அடர்வேங்கை மரம தாயித்
தெரியாது சரியான பெரியசன் யாசித்
திருட்டுவே டம்பு னைந்து
தேனுந் தினைமாவுந் தின்றருசி கண்டங்கு
தேடிநன் னீர ருந்திக்

கரியானை வருதென்று பயங்காட்டி ஏமாற்றிக்
கலியாணஞ் செய்து கொண்ட

கந்தனே பரமசிவன் மைந்தனே எனையாள்வை
கதிர்காம வடிவேலனே

---

20. மணக்குரோஜாக்கோண்டை என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-அட-தாளம்.

கண்ணிகள்.

உங்கள்—சாதி ஒன்றுயிருந்தால் நீதிதவறி ஆதி
மாமன்ராமம் போடலாமா சோதி
சோமன் சாம்பல் பூசப்போமா வீதி
சொல்லிச்சிரிக்கும் புப வாமா சேதி
சொற்பமல்லவே மயில் பூமா க்யாதி
தோன்றுமோஉனக்கிதில் நேமா குறத்
தோகைதெய் வானைபுகழ் நாமா நதி

வருவாயருள் பெருமானெருரு
குருவாகிய உருவாய்எனின்
வல்வினையை மொழியாமா யிந்த
வாதனை பொல்லாது கோமா - உங்கள் (சா)

முன்னம்—பத்மாசூரனுக்காகப் பயந்துவரங்கொடுத்துப்
பதுங்கியொழியச் சொன்ன தாரோ அந்தப்
பரமனுக் கிருபெண்கள் வேறோ முத்தி
தரச்சென்ற திறமதின் கூறோ - இந்தத்
தரணியிலிது நல்ல பேரோ - நத்தித்
தலைவிதிவழி வந்த வாறோ - நித்தந்
தனித்துக்கஞ்சாக்குடிக்குஞ் சீரோ - ஐயோ
சரியோவிதுநெறியோமறை முறையோமுன்குறையோநின்
தந்தைக்கிருப்பதுமெவ்வூரோ திருத்
தாளருளாததுவும் சீரோ உங்கள் (சா)

உன்றன்—தந்தைக்கு நல்லமதி தானில்லா விட்டாலுமுன்
தாயாகிலுஞ்சொல்லவொண் ணுதா இந்தச்
சங்கதியுஞ் சொல்லத் தகாதா நித்தஞ்
சண்டைசெய்திருவர்க்கும் வாதா -சிந்தை
சரியல்ல அவளொரு மாதா -நிந்தை
சாற்றுதலுனக் கொரு தோதா -விந்தை
சாட்சிநா னுரைக்கக்கூ டாதா -அருட்
சாமியினிப் பூமிதனில் சேமியென நேமிக்கவே
சற்றுமி ரக்கம்வா ராதா நீயே
தஞ்சமென் றேன்கந்த நாதா (சா)

தமிழ்ச்-சந்தச்சரப போத சாகித்யனுஞ்சங்கீத
சண்முக தாஸன் துதிப் பாட்டு -கந்த

சாமி வேலா நீ சற்றே கேட்டு -உன்றன்
தந்தைக்குநல்ல புத்தி யூட்டு -இதைத்
தானே யுரைக்கமயி லோட்டு -சிறு
தமியன்மேற்கோபம்விட்டுப்போட்டு-யோக
சரிகை கிரிகை ஞானம் காட்டு-இனித்
தாளாதெனை யாளாக்கிடுசீலாகதிர் வேலாததி
தாமதமேனோ தயையூட்டு -எனைச்
சற்சனபக்தருடன் கூட்டு -உங்கள் (சா)

---

21. அரைமைகூந்தும்பே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நெஞ்சில்—ரோசமில்லையா இது
மோசமில்லையா ஒரு
தோசமில்லையா ஐயா
இல்லையா சொல்லையா தொல்லையா வல்லையா
வேலையா (ரோ)

அநுபல்லவி.

குறக்குல வள்ளி தனைமணரவுன்
பரக்குலந்தனை மறைத்துச் சென்றது (ரோ)

சரணங்கள்.

வேடுவனுய் நீயே வேங்கைமர மானையே
விரைவாயே உன்றன்
வீரத்தனமாவிது கோரத்தனமானது
சூரத்தனமென்றேது இதுநீது மிகுசூது
உதவாது (ரோ)

ஈராறு கரமில்லையா இருமூன்று சிரமில்லையா
ஏற்றவேலையா மலையில்
எதற்கு நீ போயொளிந்தாயோ-மனம்
பதைத்துடனே மறைந்தாயோ
இது கனமாய் மதித்தாயோ கதித்தாயோ
பதித்தாயோ விதித்தாயோ (ரோ)

வள்ளிமனப் பாங்குகண்டு வனத்தினைமாவையுண்டு
வந்த துண்டு-பக்த
வரதசண் முகனைக்காக்க வருவினைய தனைத்தீர்க்க
திருவருள் கடைக்கண்பார்க்க அருள்சேர்க்க
மருள்போக்க இருள் நீக்க (ரோ)

---

22. ஆத்தோரம் நெல்லி மரம் என்ற மெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஏகம்.

நீ ஒருமுகத்துடன் பிறந்தால் உள்ளபுத்தியே யிருக்கும்
பலமுகமாய்ப் பிறந்ததினல் பாழும்புத்தி வந்ததையா

கந்தா கழுகுமலை வாழ்பவனே
வந்தாளிவ் வேளை யுன்றன் மைந்தனெனை (ஒரு)

உன் தந்தைபிணங்காத்தான் தமையன் பெரு வயிற்றான்
விந்தையுள்ளஉன்மாமன் வெளிப்பகட்டுக்காரச்சாத்தான்

வைபாபுரி வேலாவா உமைபாலா
ஐயா தண் டைக்காலா அநுகூலா (ஒரு)

மறத்தியுன் மாதாவுக்கிந்த மானிலமெல்லா மடமை
குறத்திக்கோ நீ அடிமை உன் கோலம்வெறுங் கொடுமை

குண்ணக்குடி நாதா குமரகுருநீதா
வண்ணமயில் வேதா நீ வாவாமலர்ப் பாதா (ஒரு)

சுந்தர அறுமுகனே சோமசேகரன் மகனே
சந்தச்சரபத் தமிழ்த் தாஸனெனும் சண்முகனே

பக்தியுடன்பணிந்து பாடினனே
சித்தமிரங்கியருள் வாருகனே (ஒரு)

---

23. அரகான்ஷே ஷேரம்ஹே ஐபாத் என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கவாய்-தாளம்-ஏகம்.

பல்லவி.

நீ கெஞ்சக் கெஞ்ச மிஞ்சுவதேன்
நான் கேட்கிறேன் நீ (கெ)

அநுபல்லவி.

மனச்-சஞ்சலமேலாகித் தஞ்சமென்றேபணிந்து (செ)

சரணங்கள்.

பஞ்சமாபாதகம் படருமென் சாமி
பாருலகெல்லாம் படைக்கும் பரம் நேமி (செ)
கொஞ்சமாகிலுமுன் நெஞ்சம் இரங்காதோ
கொடுமை இப்படிச் செய்யக்
கோபமேதோ (செ)
வஞ்சங்கொள்ளாதே என் நெஞ்சம் பொல்லாதே
வண்ணமயிலேறி வா வா
நில்லாதே (செ)
சண்முக தாஸன் தமிழ்மொழி நேசன்
மண் புகழும் பாசன்
மாவிசு வாசன் (செ)

---

## 24. ஸ்ரீராமர் துதி.

திருகுரு கிரிவாசா சிறுவன்குறை என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தாட்டிக ரகுராமா ராவணனுயிர்
வாட்டிவதைத்த நேமா ஏ பூமா (தா)

மேட்டிமையுனக் காமா இம்மேதினி
மேற்புகழ்ந்திடலாமா நற்கோமா (தா)

மகுட சரணங்கள்.

கோகுலபாலனே கோவிந்தலோலனே கோமளசீலனே
கோபமென்மேலுனக் கேனோ பாவிநானோ (தா)

தோகைரு.

கொஞ்சமாநெஞ்சினில் வஞ்சமேன் பஞ்சவர் குடியிருப்பே
சஞ்சலமிஞ்சிநின் தஞ்சமே கெஞ்சுத லென்விருப்பே
கோதிலா தீபனே சாமள ரூபனே கோதண்டனே
வாமனவதாரனே வாபரந்தாமனே வைகுண்டனே

பாட்டு.

கல்லைப்பெண் ணாக்கிவைத்தவா காளிங்கன்மீது
கால்தூக்கி யாடிநின்றவா கனவல்லவா
தொல்லையி லென்னைவைத்தவா சூதல்லவா-நான்
சும்மாதிரிந்து செல்லவா

காத்தருள்புரி சண்முகனே
கருதினேன் தேவகிமகனே
பாற்கடல்பள்ளி கொண்டவனே
பார்முழுதெடுத் துண்டவனே (தா)

## முருகன் துதி.

25. தாள்வடந் தந்தேன்னை நீ விடடி என்ற மெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி·

பல்லவி.

காடுகுகையி லிருக்கப் போகுமா ஞானக்
கந்தனே கயிலைசிவன் மைந்தனே ஈதாகுமா (கா)

அநுபல்லவி.

காடுநகரிலுந்தனை வேண்டாமென் றுரைத்தாரோ
ஞாயமில்லாக்காரியத்தைச் செய்வதினுலென்னபேரோ ()

சரணங்கள்.

தாலிகட்டிக்கொண்டுவந்தாயோ யானைவருதல்
போலுருட்டிக் கொண்டுவந்தாயோ வீரனும் நீயோ (தா)
கூலிக்காகப் பாடுபடும் குறப்பெண் வள்ளியினிச்சை
பாலிலொரு சீனியிட்ட பாகோஈ தென்னலச்சை (கா)
தாய்தந்தை யுனக்கிங்கில்லையா இருந்தால் அந்தச்
சந்ததி எவர்கள் சொல்லையா தொல்லையா (தா)
வாயில்லாதபிள்ளைபோலுன் வழக்கைச்சொல்லாதிப்படி
யாய்ப்பரதேசியைப் போல் அலைகிறுய் தனித்தோடி (கா)
அண்ணனுக்குனக்குஞ் சண்டையாம் தந்தைக்குப்பகை
எண்ணியே நீ கோபங் கொண்டையாம் பண்டையா (அ)

வண்டுமொங்கனிக்குத்தாதை வலம்வந்துவாங்கிக்கொண்டு
உண்டதமையனைக்காண உதவாதென்றேவெகுண்டு (கா)
தந்தை போலிருக்க ஞாயமா அவன்போல்காவிக்
கந்தையணிந்திடமாயமா உபாயமா (த)
எந்தையே இப்பேருலக நிந்தையினிற் படலாமா
சந்தச்சரபசண்முக தாஸனைக்கை விடலாமா (கா)

---

## 26. இங்கிலீஷ் பேண்ட் நோட் மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்.

பல்லவி.

மாயமாக வேயிம் மைந்தனைமறந்தயோ
மாமயில் மீதேறி எங்ஙனம் பறந்தயோ
தூயர்கள் தொழுதிடும் வழிசிறந்தயோ
சொந்தஞானம்வந்துகூடவே நிறைந்தயோ (மா)
சோதனையிதே ஏதென்றன்மீதே
வாதுசெய்யாதே வேதாவிப்போதே
தேவனென்று பேரைத்தாங்கித் திகைக்கலாகுமா
திரும்பித்திரும்பி மயிலின்மீது திரியலாகுமா
காவடியிருந்துமடியர் கலங்கப்போகுமா
காக்கவேணேயில்லாதிக் காலமேகுமா
காமுருகையா தாமதஞ்செய்யா
தேமலர்க்கையா நேமகத்துப்பா (மா)

இப்படுக்கி யானிருந்தா லென்று தேருவேன்
இன்பஞான விதிமார்க்க மென்று சேருவேன்
வெப்பமாய காதல்வேட்கை யென்றுமாறுவேன்
வேதனேநின் பாதபத்ம மென்று நேருவேன்

வேகமாய் வாராய் வேதனை தீராய்
பாகமேதாராய் பாது நீ பாராய் (மா)

உன்னைப்போலிங் காண்டியாகி ஊரில்திரியவோ
என்னையிப்படிவிட்டாயென் வயிறெரியவோ
விண்ணுமண்ணும்நீசெய்மோசம்வெளியில்தெரியவோ
வெம்பிரா னலைதல்நின் விருப்பத் தரியவோ

வித்தைக்கருள் குகனே சத்திக்கொருமகனே
சித்தர்புகழ் சுகனே நத்தினன் சண்முகனே (மா)

---

27. ரேங்கநாயகமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மண்ணையுண்டாயோ
மாதா நின்தாய சோதா ஒன்றுங்கொடாதால் நன்றென()

அநுபல்லவி.

கண்ணா கார்முகில் வண்ணா நின்சிரம்
அண்ணாந்தேவீதி (ம)

சரணம்.

வெண்ணெய்கிடைக்காத எண்ணத்தினால்நடு
வீதியிலேவிளையாடி -மிக
வேகமாய்ப்பாலரோ டேகமாயோடியே
விவேகமதாயன் றுகூடி
விண்ணவர்போற்றிடத் திண்ணவரேற்றிடத்
திரட்டி ஏகமாய் உருட்டி வேகமாய் மருட்டித் தாகமாய்()
கோவர்த் தனகிரி தன்னைநின் கையிற்
குடையாய்ப்பிடித்து நின்றாயே-மேலும்
மாவலிச் சக்ரவர்த் திக்கேம கிழ்ந்துநின்
மாவடிதந்து சென்றாயே
ஆவலுடன் பன்னீ ராயிரம் கோபியர்
அருகா வந்திட மருகா மர்ந்திட உருகா நின்றிட (ம)
நீராடமாதர்கள் நேராகவே செல்ல
சீராயவர் பின்னரடுத்து-கற்பில்
மாறாதகோகுல மங்கையர் சேலையை
மார்போடணைத்ததையெடுத்துக்
கூராகப் புன்னையி லேறஅவர்கண்டு
கோண வேநில நாண வேயிலே
பூணவே முன்னம் (ம)
வையமே பொய்யிதை மெய்யாக எண்ணிநான்
வாடிடவோ என்னை வருத்தாய் -இன்னும்

வாதனை செய்யாதே சோதனை யேனிந்த
வஞ்சகச்செய்கையை நினைத்தாய்
நெய்யுடன்பாலுண்ட கையினிற்கோதண்ட
நேசா கோகுல ராசா சண்முக
தாஸானு கூலனே (ம)

---

28. அம்மா மதுரைமீனாட்சி என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

திரு- வெங்கடாசலபூபதியே - நினை
வேண்டினேனித்ததியே - காண்டிபன்
விகசித சாரதியே
வேதம்புகழ் நிதியே வே - வே (திரு)

இந்த- அங்க மென்னஒரு நிலையா -வரும்
ஆழிய கட லலையா யாமெனை
யாள்வதுனக்கு மலையா
அடியவனு னிலையா அ - அ (திரு)

புவி- எங்கும் நிறைந்தபரந் தாமா-என்மேல்
இன்னும் வர்ம மாமா சதாமா
ஏற்குமோ ஜய ராமா
இலக்குமி தன் நேமா இ - இ (திரு)

மட மங்கைமார்களுற வாடி -அந்த
மாய வகையிற் கூடி - ஓடோடி
மருண்டேன் பல கோடி
வந்தருள் வாய் நீடி வ - வ (திரு)

கீத-சந்தச் சரப ரச மூட்டு -கின்ற
சண்முகன் தமிழ்க் கேட்டு-அருள்நாட்டு
சனன மரண மோட்டு
தாச ரொடு கூட்டு தா - தா (திரு)

---

## 29. அம்பாள் துதி.

ராமனே எனையாள்வாய் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தாமரைமீனாட்சி பதந்
தந்தருள்வ தில்லையோ காட்சி (தா)

அநுபல்லவி.

மாமறை போற்றிடு மரகத மாட்சி
மானிலத் தோர்கள் வணங்குமத் தாட்சி
தாமதமேன் தேவ தாவெனுஞ் சூட்சி
சரிகைகிரிகையோகஞான சாஸ்பத சாட்சி
கடாட்சி (தா)

## சரணங்கள்.

மாமதுராபுரி வாழ்பிரகாசி
மைந்தனுனைப்பணிக் தேன்பவநாசி
தாகலந்தாள்தரு வாயரன்நேசி
சாலோகசாரூபசாமீபசாயுட்சியவாசி
உல்லாசி (தா)

சோமசேகர சுந்தரன்பாரி
தொல்லுலகெங்குந் துதித்திடுகாரி
ஆமெனும்பொரு ளானகெம்பீரி
அகாரி இகாரி உகாரி வகாரி மகாரி
நல்வீரி (தா)

பாமரனுனைப் பரிவினில்நாடி
பக்தியோடுன்பாதம் பாடிக்கொண்டாடி
ஆமாம் பிறவிக்கே ஆளாகவோடி
அலையாமல்நின்பதமேபெற நிலையாகிய விதமேயுற
அறிந்தேன் சண்முகன்தேடி (தா)

---

## 30. ஈஸ்வரன் துதி.

சிற்றரசர்சப்பங்களும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

### கண்ணிகள்.

ஆரைக்குடிகெடுக்க நீபோண்டி வேடங்கொண்டனையோ
எவரைமயக்கிடுதற் கிந்தவேடம்பூண்டனையோ (ஆ)

சாரைகழுத்தில்சுற்றி வெண் சாம்பலைஎங்கெங்கும்பூசி
நீரைத்தலைசுமந்து நல்ல நீதிமதியணிந்து (ஆ)
காவித்துணிதரித்து உன்றன் கையில்வட்டோடெடுத்து
ஆவிதுடி துடித்து நீ அலைந்துபிச்சைக்கடுத்து (ஆ)
வெந்ததலையெலும்பைத் தினம் வேண்டியேமுன்தாள்வடமாய்
அந்தமென்றேயெண்ணி மேலணிந்தாயாபரணமாய் (ஆ)
வித்தகன் சண்முகன்துதி நதி வேண்டாதிருக்கலாமா
எத்தனைதான் சொல்லியுமீங் கென்றனைமறக்கலாமா (ஆ)

---

## 31. பாலசுப்ரமணியர் துதி.

அளுக்கும் பளுக்கும் தளுக்கும் என்ற மெட்டு ஜீழ்மகுடம்.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எனக்கு முனக்கு மினியதொந்த மில்லையா
இதுதானென்ன தொல்லையா (எ)

அநுபல்லவி.

வணக்கு றவள்ளி தனைம ணந்திட
வந்தாய் கொந்தாய் எந்தாய்
வாதா சூதா நீதா (எ)

மனக்க வலைகொண் டிருப்ப துமென்ன
மர்மம் வர்மம் நிலையோ
கர்மம் தர்மம் இலையோ (எ)

சிறந்த மாமயி லிருக்கு தனக்குச்
சீராய் வாராய் நேராய்
சீலா கூலா வேலா (எ)

அறந்த வறினு மறந்தி டேனுனை
யானே தானே கோனே
ஆதி நீதி ஜோதி (எ)

சந்தச் சரப சண்முக னெனுஞ்
சாமி வாமி புதல்வா
நேமி பூமி முதல்வா (எ)

---

32. கருஞ்சாயிக்கோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தனே ஞானக் கபாலசூல னீன்ற மைந்தனே (க)

அநுபல்லவி.

காவடிவேலனே காத்திடு சீலனே
கானக்குறத்திவள்ளி லோலனே (க)

சரணங்கள்.

மாலுக்குமருகா நின் மனமெனச்சுருகா
வாறெனதெய்வானை மகிழ்ந்திடுமுருகா (க)

அந்தரிமைந்தனே நின் அருள்கொடுவிந்தனே
ஆதாரமேதுமிலாது நானொந்தனே (க)

மகுடம்.

நாதநன்னீதனே களினபொற்பாதனே
வேதனைதாளனே பூதநயாளனே (க)

ஐயாமுருகையா மனத் துய்யா பன்னிருகையா (க)

அருணகிரியோ டுறையுமுருவே
வரமருள்புரி குருவே அருவே (க)

பத்தியாயுத்தம சித்தரைப்புகழும்
வித்வசண்முக தாசனேமகிழும் (க)

---

## 33. தலைவி பிணங்கல்.

கையில் பணமில்லாமல் என்ற மெட்டு.

இராகம்-சாவேரி-அடதாளம்.

பல்லவி,

உன்னோடுசேர்ந்தென்னை ஊரெங்குஞ்சிரிக்கிறார்
உனக்கென்ன வெட்கமில்லையா (உ)

அநுபல்லவி.

எந்நேரம் பார்த்தாலும் சன்யாசக்கோல்மா
சொன்னாலுங் கேட்காத தின்னுமென் காலமா (உ)

### சரணங்கள்.

என்னோடுசேர்ந்துனக் கித்துணையாய்முரண்டாம்
பின்னுமெங்கெங்கோநீ போக்குவரத்துமுண்டாம்

போதுமுன்னையம் நின்தாய் தகப்பன்வந்து
ஓதினது மாயம் என் மாதாபிதாகண்டால்
ஏகுமென் காயம் இனி நீ
தனியாயிருந்திடு எனைநினைக்காதே-உனையும்
இனிநானினைத்திடேன் உண்மைதானிதே (உன்)

கெட்டகுடியரையே கிட்டவுனக்கிங்கெண்ணம்
துட்டரைக்கண்டாலே தூரப்போவதேதிண்ணம்

சொல்வதென்னையா மெய்யா
பொய்யா உரைப்பாய்

நன்மையேதையா இதுநாள் வரை
நயமாய்ப் பயமாயிருந்தும் (உன்)

வட்டிக்கு வட்டியாக வாங்குமுனதுமாமன்
கெட்டிக்காரத்தனமாய்க் கேட்டாருமில்லையென்று

கேட்கவந்தாரோ மருமகனுக்குப்பெண்
பார்க்கிலோர் பேரோ கேரோ எனது

சொந்தமப்போதிருந்தால் வந்தேயிருக்கும்பழி
சந்தச் சரபத்தமிழ் சண்முகனுரைவழி (உன்)

---

## 34. முருகன் துதி.

### விருத்தம்.

வெண்டாம ரைபூத்து விரிமலர்ப் பொய்கையும்
விகசிதவண் டீட்டு தொனியும்
வேதியர்கள் நான்குமறை வேதங்க ளோதிடும்
வீதியழ குஞ்சோலையும்
கொண்டாடி யடியவர்கள் பாற்காவ டிகொண்டு
கோயில்வல மருவு நெறியும்
கோமேத கம்முத்து வயிரம்ப தித்தநற்
கோபுரவ லங்காரமும்
கண்டார்ம யங்கவிரு காதிலகு வளையமும்
கவசகுண் டலகிலையமும்
கையிலொரு திருவோடு லங்கோடு தலைமொட்டை
காலிலணி மிதியடிகளும்
பண்டார வேடமது போலவி பூதியும்
பார்க்கவிரு கண்போ துமோ
பாராதி யண்டமொடு பலபலவ தாய்நின்ற
பழனிமலை எங்க டவுளே.

### 35. முத்துக்கும ரையனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தண்டாயுதக் கையனே பர
தயாள குணனே குகனே (தண்)

அநுபல்லவி.

பண்டாரடியர் கண்டேபுகழ்ந்து
கொண்டாடுந்திருத் (தண்)

சரணங்கள்.

கண்டாய் நாரதற்கிதம் விண்டாய் வேடுவருபங்
கொண்டாய் மானினைத்தேடித் துண்டாய்ச்சென்றுவள்ளிமா
வுண்டாய் பண்டார மானுப் (தண்)

ஐயா இச்செகமாயை மெய்யா உனைத்தொழுதல்
பொய்யா இன்னமுங்கிருபை செய்யா விடிலென்மனம்
நையாதோ நீசொல்லையா (தண்)

கூட்டம் நாய்நரிக்கேநல் லூட்டம் உண்ணவுண்ணக்கொண்
டாட்டம் இவ்வுடலென்சி ரேட்டம் வந்தவழியே
ஓட்டம் வீண்பொம்மலாட்டம் (தண்)

கேடு அசுத்தக்குப்பை மேடு தசையெலும்புக் கூடு
ஐவர் வசிக்கும் வீடு மூடி விற்சுடு காடு
ஓயாது பாடு (தண்)

மட்டை பாம்புகழற்றுஞ் சட்டை உயிர்பிரிந்து
கட்டை எதற்கிங்காகும் முட்டை அமைந்தகருக்
கொட்டை இதுவோ கிட்டை (தண்)

வாசன் கூடலம்பதி நேசன் வளர்தமிழ்ப்பிர
காசன் சந்தச்சரப ராசன் சண்முகக்கவித்
தாசன் ஆமெனக் கருள் (தண்)

---

## 36. வண்ணச் சந்தமகுட மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மனமிரங்கிடுவாய் தயாநிதியே—முன்னம்
மாங்கனிக்கேபுவி யாவும்வலம் வந்த (ம)

அநுபல்லவி.

வனமதில் தேனுந் தினைமாவுந்தந்த
இனம் குலம் அறியா துண்ண வந்த (ம)

மதத்து எதிர்த்த சூரார்சாக
உதைத்து வதைத்த வீரா வேக (ம)

மதகரிமடுவதில் முரஹரியெனமுறை இடவரமதுதந்தோன்
மருகா அருகே வருக
முருகா வரமே தருக (ம)

மார்க்கண்டனுக்காக மறலியை உதைத்தோன்
மகனே குகனே ஆறு
முகனே சரவண பவனே (ம)

பார்வதி என்றொரு சீமாட்டியாள் பெற்ற
பாலா சீலா தண்டைக்
காலா வேலா மேலா (ம)

ஆனைமா முகத் தைங்கரர்க்கிளைய
ஐயா நான் செய்யாத குறை
செய்தாலும் உய்திடும் முறை (ம)

பக்தர்களெந்நாளும் பாடிப்புகழ்ந்திடும்
பாண்டிநகர் மதுராபுரி வாழ்ந்திடும்
வித்தகன் சண்முக தாஸனை யாண்டிடும்
வேதா மரைப் பாதா-குரு
நாதா இது வாதா (ம)

---

37. மகுட வண்ணச்சந்த மகுட மெட்டு.
இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

கழுகுமாமலைக் குகனே என்னைக்
காத்திடு மறுமுகனே நல்ல
அழகு மயூர மீதிலமர்ந்த குருபரனே (கழு)

அநுபல்லவி.

கயிலைமலை யுமை மகனே எம்
கணபதி சகோதரனே மால்
கட்வுடன் மருமகனே அருட்
காவடிகொண் டாடுவர்க்குத் தேவடிவாய் வந்ததிருக் (க)

சரணங்கள் மகுடம்.

கந்தா நொந்தே வந்தேன்
சிந்தை யுகந்து பணிந்தேன் (க)

கதிதர இதுதகி நிதியெனு மதிபதி
சதமென உனைத்துதி யடியவர்க் கருள்மதி (க)

கான தான வேடுவர்கள் கான
கான ஞான வேங்கை மரமான (க)

கனத்தி மதிமிகு மனத்தி வளர்தினைப்
புனத்தி குறவர்க ளினத்தி யைமணந்த (க)

கந்தங் கமழும் கடம்பணி தோளா
சந்தச் சரப சண்முகத யாளா (க)

---

38. ஐயா பழனிமலை வேலா என்ற மெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

குறக்குல வள்ளிமகிழ் முருகா- நின்
குழந்தை எனக்கு மன முருகா வருகா
திருக்கும் வஞ்சமென்மால் மருகா- நின்
இணையடி தொழுதன னிசைகா தழகா (கு)

குருமுனி தனக்குப தேசா- இந்தக்
குவலயம் புகழ்பிர காசா நேசா

பெருகவு ணரைக்கொன்ற போசா- என்
பிழைபொறுத் தருள்புரி பேசா நீசா (கு)

கோலமயிலா தண்டைக் காலா- சிறு
குமரியுமை மகிழும் பாலா மேலா
ஞாலம் புகழுங் குண சீலா- பல
நலம் புரிந்திடும்வடி வேலா லோலா (கு)

தெய்வ யானைக்கொரு மோகா- குறத்
தெரிவை வள்ளியுறும் பாகா யோகா
ஐயா தனுகரண போகா- நின்
அடியனை யாட்கொள வாகா யூகா (கு)

பிரமனைச் சிறையிட்ட நாதா- என்
பேரினனக் கித்துணை வாதா போதா
சரத சுகிர்தமலர்ப் பாதா- பணி
சண்முக னுக்குத்தமிழ் தாதா நீதா (கு)

---

## 39. மகாவிஷ்ணு துதி.

கார்த்திகா நித்தய கல்யாண என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாக்-அடதாளம்.

பல்லவி, சரணங்கள்.

கோபிகா ஸ்ரீபரந்தாமா கோரினே னுண்டருள்பூமா
பாபவி மோசனராமா பக்தர்வேண் டாயிர நாமா (கோ)

அத்திக்கு முத்திதந்தோனே
அனந்தனின் மேல்துயில்வோனே
சித்தம் மெய் சித்தம் சொர்ந்தேனே
சிலையைப்பெண் ணாகச் செய்தோனே (கோ)

ஸ்ரீரெங்கா ஓ நரசிங்கா ஸ்ரீதாலட்சுமி மகிழ்துங்கா
பாரெங்கள் பாண்டவர்பங்கா பச்சைநிறமேனியினங்கா
அச்சுத மச்சாவதாரா ஆவினமேய்த்த ஒய்யாரா
பட்சம்வைத்தருள்வைசிங்காராபாலசண்முகனேகம்பீரா()

---

40. முருகன் பெருமை என்ற மெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்ணன் துணையே
காதலொடு சாதகமா யாதவகு லத்துதித்த (க)

அநுபல்லவி.

திண்ண மதாய்ப் பஞ்ச வர்க்குத்
தேறுதல் சொல்லி ரட்சித்த (க)

சரணங்கள்.

கானகத்துவீணைவைத்துக் காயனமிசைத்துநின்ற(க)
கயகரி முராஹரி பெணவரங் கொடுத்தவன்
கதறக்கதறக் கராவில் சக்கரத்தை விடுத்தவன்

செயம்பெறப் பாரதப்போர்தனை ந் தொடுத்தவன்
சித்த சுத்தர் கூட்டத்தை ரத்திரித்த மடுத்தவன்

செஞ்சரண மூந்து பைந்தாள்
தஞ்சமெனவே பணிந்தால்
அஞ்சலெனவே வருவான்
நெஞ்சிரக்கமே பெறுவான் (க)

வித்தகர் மனமுருகி பக்தி பஜனை புரிய
சித்த மிகவேமகிழ்ந்து தித்திடு மொருகரிய (க)

ஞாலமிதில் அடியார்களை ரத்திடும்
பாலக சண்முக தாஸன் துதித்திடும் (க)

---

41. ஜெகன் மோகன ஸ்வரூபமாது. என்ற ஒரடிச் சந்தம்.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வள்ளி மகிழும் குமரேசா வா வா சர்வேசா (வ)

அநுபல்லவி.

புள்ளி மயிலின்மீ தேறிய வாசா
பொதிகைமா முனிக்கருள் புரிந்தகன்னேசா
அள்ளித்தேன் தினையுண்ட அருட்பிரகாசா
அரகர பழநியில் வாழ்முரு கேசா (வ)

நீடார் தவநா ரதரோது- புதுமைகேட்டு
வேடுவ வேடங் கொண்டப்போது- பரணடுத்து
ஜாடை புரிந்து செய்யவாது- மனம்வெருண்டு
ஏடாகூ டம்பண் ணுதேதீது- ஓடோடுநீயென்
றென்னென்னமோ முன்னும் பின்னும்
பின்னமாகச் சொன்னசெய்தி
ஏற்று ஏமாற்றும் போது
எப்படியோ விற்பிடித்த
கைப்பிடியர் ஒப்பிவரக்
கண்டு பயந்துகொண்டு
ஏங்கியவ ளேங்கியேஓர் வேங்கையுருத் தாங்கியேமுன்
நின்று பின்னுமுயன்று
ஏகமாய்ப்பசி தாகமாய்க்கிழ மாகவயதுமனேகமானதென்
றெண்ணிக் கொளவேகண்ணி
என்னசெய்வேன் எண்டிவள்ளி என்னவே கன்னத்தைக்கிள்ளி
எத்தியெத்திப் பேசிப்பேசி உத்தமிமுன் னேசன்யாசி
என்றுமுழுப் பொய்யுரைத்து நின்றவள்ம னங்கரைத்து
ஏதடிதண் ணீர்தவித்துக் காதடைக்கு தென்றிசைத்து
இட்டுக்கொண்டொருசுனையைக் கிட்டிச்சென்றுனைவருதென்
றேய்த்து ரகஸ்யத்தாலி
கட்டிக்கொண்ட றையறிந்து மட்டுப்படா தவேடர்கள்
காடுகாடா கத்திரிந்து தேடித்தேடி யேதுடர்ந்து
கடு கடு வென்றே பிடி பிடி யென்றே

இடி இடி யென்றே அடி அடி யென்றே
இசைத்து வரவெதிர்த்து
இச்சையுடனேசிறந்த பச்சைமயில் மீதிருந்த
உச்சித வடிவுகாட்டி மெச்சுமவர் பவமோட்டி
ஒருருவாகிய பேருருவத்திரு
வாறு முகத்தி ராறு புயத்துடன்
ஓங்க-தேவர்கள் தாங்க

அரகரமுருகா சரவணபவனே
அச்சுதன்மருகா அரனொருமகனே
ஆள்வா யென அடியவர்
ஆசையுடன் அதி நேசமுடன் துதி
ஐயா பன்னிரு கையா
அத்திமு கத்தவ னுக்கிளை யோனே
ஆதரித் தருள்புரி பரமனீ தானே
சத்திமீ னாள்மக னாகிவந் தோனே
சண்முகதாஸனு னைப்பணிந் தேனே (வ)

---

42. வையாபுரி முருகையனே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கவாய்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயா வேலாயுதக் கையனே
அன்பினிலுனைப்போற்றினேன் (ஐயா)

அநுபல்லவி.

ஆகா தினி யேகா வினை போகா
கன யூகா நல் (ஐ)

சரணங்கள்.

செய்யாதகாரிய மென்னசெய்தேனோ
திருவடிதனையனு தினமறந்தேனோ
வையாமலே கிருபை வாதுகளேனோ
வையகத்தில் பொல்லாப பாவியும்நானோ

மகுடம்.

வாதனையேதினி ஒதிடுவாயேசீ
பாதகனுகினேன் பூதல மீதினில் (ஐ)

அருணகிரிக்குமுன் அருள்கொடுத்தாயே
அவுணர்கள் படைதன்னை அறக்கெடுத்தாயே
குறு முனி தனக்குமுத் தமிழ் கொடுத்தாயே
கோபிக்கலாகுமோ நானுன்றன்சேயே
கோபிக்கலாகுமோ நானுன்றன்சேயே

மகுடம்.

கோதிலா மாமறை வேதனை முன்குறை
ஒதியே ஓரறை மோதி வைத்தாய்சிறை (ஐ)

பாவியெனவே நொந்து பாழ்நரகாழ்ந்திடப்
பாசவலை வந்தென்னைப் படுவென்னச்சூழ்ந்திட
ஆவிதுடித்திப்படி அவனியில் வாழ்ந்திட
ஆமோரின் கிருபையில் லாதுநான் தாழ்ந்திட

அரகரகுருபர சரவணபவனே
பரமனுக்கருள்தரு கிறசண்முகனே (ஐ)

---

## 43, மனத்தொடுகிளத்தல்.

வானிலுள்ள மின்னிறங்கிவங்வதுபோல் என்ற மெட்டு

இராகம்-தன்யாசி-தாளம்ஆதி.

### பல்லவி.

இராகவனடி பணியாக்கடு மனமே
நாதியற்றதுற் குணமே (ரா)

### அநுபல்லவி.

சாகவோஇவ் வுடலைச் சதமாய் வளர்த்திப்படி
யாகவோ நீ சுடலை அடுத்து விறகால் மூடி
அக்கினி தன்னிலே வேகவோ
அருமையில்லாமலே போகவோ (ரா)

பட்டிபல் சிட்டையாகப் பாரிலேழைகள்நோக
ஒட்டிக்கி ரட்டியாக வட்டிபெடுத்தநேக
பெட்டியிற்புதைத்து வைத்தாயே-ஆசைப்
பேயும் பிசாசு மொத்தாயே (ரா)

மங்கையர் மாலதிலே மயங்கி மருண்டதிலே
சங்கையில்லாமையிலே சார்ந்துகெட்டதின்போலே
சகத்தினிற் கண்டதில்லையே
தயவுடன் கேளென் சொல்லையே (ரா)

ஆசைக்கடல் கிடந்து ஆவிமிகவும்நொந்து
தாஸன் சண்முகன் முந்து தமிழ்ருமை மறந்து
சஞ்சலத்தினுலே கெட்டாயே - நானேச்
சாம்பிணமதாகி விட்டாயே (ரா)

---

## 44. விஷ்ணு துதி.

வேலனே பாலன் முகம்பாரையா என்ற மெட்டு. 2

இராகம்-இந்துஸ்தான்-கவாய்-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஜெய-ராமனே ரவிகுலசோமனே-உனை
நாடியே மனம் வாடியே பதந்
தேடியே புகழ் பாடினேன் (ஜெ)

காமன் தனையளித்த காளிங்கநிர்த்தனனே
காயனே ஆயர் நேயனே-மறை
வாயனே நற்ச காயனே (ஜெ)

பாமர ஜென்ம மிதிற் பாதவித்தேன் வாடி
பாகனே கன யோகனே-மா
விவேகனேவை போகனே (ஜெ)

சந்தச்சரபத்தமிழ் சண்முக தாசன் மகிழ்
சாரனே வில்லில் வீரனே-பேரு
தாரனே அருளாரனே (ஜெ)

---

## 45 முருகன் துதி.

தேவா சம்போசிவா என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வா வா வனக்குறவா
வள்ளிகரத் தேனுந்தினை மாவுமுண்டவா (வா)
கா வா கதிர் வேலவா
கயிலைமலை ஆண்டிபெற்ற கந்தனென்பவா (வா)

அநுபல்லவி.

ஆவலாகி நாரதாதி அன்றுரைத்த வார்த்தையாலே
காவலான மாதுமுன்னர் கானவேடன் தன்னைப்போலே
மேவி மேவி மானைதேடி மீண்டுமீண்டுசென்றதாலே
மெல்லி யண்ணரையழைக்க வேறுருவெடுத்தாப்போலே
ஆ கா அருள்முருகா
ஆயர்மனை வெண்ணெய்யுண்ட அரிமருகா (வா)
வா கா வருவாய் குகா
வானவர்க் கருள்புரியுஞ் சிவஷண்முகா (வா)

பாகனே பரமனுக்கு யூகமாயுபதேசித்த
யோகனேதெய்வானைமகிழ்போகனேமோகனேசுத்த
வாகனே வந்தருள்புரி தேகனேயூகனேசித்த
வேகனே வேலனே கோனே
வேண்டினேன் சண்முகன் நானே (வா)

---

## 46. மகாவிஸ்ணு துதி.

### விருத்தம்.

சனகனது குமரிசீ தாமனம கிழ்ந்துமுன்
தாவுமா னென்று கேட்கத்
தனியாக வந்தமா ரீசமா னைக்கொண்டு
தருவதாய்ப் பின்து டர்ந்து
மனதார வேயதைக் கொன்றசத் தங்கேட்டு
மன்னுலக் மணனு நாட
மாயமால் ராவணனு பாயமாய்த் தேரிலம்
மாதையடி யோடெடுக்கச்
சினமாகிப் பின்வந்து தம்பியைக் கேட்டந்தச்
சேதி முழுதுமு ணர்ந்து
சீதாபி ராட்டியமை சென்றவழி அறியாது
சிந்தித்து வாலி தன்னைத்

தினமொன்று சேதித்து வானரநல் வீரரொடு
தென்னிலங் கையடைந்து
தீயரா வணனங்கு மாயஒ ரம்பெய்த
தேவஸ்ரீ ரகுரா மனே.

---

## 47. ஸ்ரீ ராமாயண ஓரடிச் சந்தம்.

இதுவே பரமசுகமாகும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுதினக் கடுத்ததோ ராமா-எடுத்
தியம்பிட லாமா (இது)

அநுபல்லவி.

சதமெனச் சீதையின் சொற் கேட்டுத்
தம்பிசொல்இதத்தையுந்தட்டிப்போட்டு
இதமுள்ள மானென வேயிட்டு-கிற
இச்சையிற் பின்பற்றிப் பெருங்காட்டு-வழி
ஏகியது மாயமென வேதெரிந்தப் போதங்கொரு
கணைபூட்டுவது (இது)

அநுபல்லவித்தொடர்.

சீதை லட்சுமணனுக் கபயம்--என்று
திருட்டு மாரீசன் சொன்ன சமயம்
ஏது பெருமோசம் வந்ததென்று-ஜானகியுமந்த

இளையவரோடு சொல்ல இதுகேட்டவருஞ்செல்ல
எந்திழை தனித்தாளென்று எண்ணிய ராவணன் சென்று
இச்சையற்ற சன்னியாசி பிச்சைக்காரனென்னப்பேசி
ஏமாற்றி ஒரு தேரிலேற்றி ஏகமாகவே வெகு
வேகமாகவே கொண்டு போக அன்னை மனது
வேக இதையறிந்தேக பல வானை

இறைவன் ஜடாயு வந்து தடுக்க-அங்
கிசைந்தவனுடனே போர்தொடுக்க
இடித்து அவன் சிறகை
ஒடித்து உயிர்பிரிய
விடுத்து இலங்கைந
ரடுத்து மிருவரக்கர்

இனமா மசோக வனமதிற் சிதையைக்
கனமாய் விடுக்க மனமே துடிக்க
வந்து விரைந்து சிறந்து பரந்து
நிறைந்து மறைந்து இருந்தவளங்கெனக்

கேட்கப்

பதறித்தம்பியின்மனஞ் சிதறியுரைக்கஉடல்
அதறிடப்பெரும்புவி கதறிடஅழுதது (இது)

சரணங்கள்.

பெண்ணுனக்கேனிந்த வருத்தம் கொஞ்சமுநெஞ்சி
லெண்ணமலிதுசெய்வதோ பொருத்தம்-சஞ்சீலங்கொண்டு

புண்ணாகிநோவதென்ன அருத்தம் ஈதாகாது
அண்ணா வென்றேயுன் தம்பி யுரைத்தும்-அதைக்கேளாது
சித்தமும் பதைத்து முன் மெத்தவுந் துடித்துத் துயரேற
ஆவல்மிகுந்து
பத்தினியே உத்தமியென் றெத்திசைய னைத்தும்வழிகோர
சடாயு வந்து
சத்தியேயுன் பத்தினியை எடுத்தவனப் பித்தராவண
னெனக்கூற-மராமர மெய்து
சத்திவாலி செத்திறக்க நத்தியேவ லைத்துப் பதஞ்சேர
வானரங்களைச் சேர்த்து

சிறுவன் சுக்ரீவன் திருநக ராண்டிட
அருள்வடிவா யனுமா னுந்தனைத் தாண்டிடப்
பெருங் கருங்கடலொரு இமையினில் தாண்டிட
இருளொடு கெடுபடு மிலங்கணி மாண்டிடக்

குதித்தும் லங்காபுரியை மிதித்தும்
தாயைக் காணாது பதைத்தும்
இடந் தெரிந்தபின் கதித்தும்

அங்கரு கடுத்து
சங்கதி தொடுத்து
கணையாழி கொடுத்து
விஸ்வரூப மெடுத்து
பயமது விடுத்து
அரக்கரைப் பொடித்து

சதறிட அசோகவன மதறிடச் சிம்பு சிம்பாய்ச்
சிதறிட அரக்கர் குலம் பதறிட இந்தரசித்தங்
கெதிரிடஅவனதுமன முதறிடவிருவிழிகுதறிட

ஆங்குறும்

அரக்கர் குலச்சேனை அதுபொடி
பறக்கும்படிக்கே அவர்கள்முடி
தெறிக்கும்படிக்கே சூடற்கொடியடிக்க

நாகாஸ்திரத்தால் பிடிக்க
ராவணனிடம் விடுக்க
அவனங்கனங் கடுக்க
விபீடணருந் தடுக்க
வாலா லாசனங் தொடுக்க
வந்தனுமானைக் கெடுக்க
தீதனைச் சுற்றி முடுக்க
அடடாவெனக் குதித்து
அகமதில் மிகச் சிரித்து
இடடாவெனக் குதித்து
இலங்கைநகர மெரித்து

திடமுடனே யன்று
வந்துன்முன் னின்று
உரைக்க அது நன்று
எனப் புகழ்ந்து சிறிது மனங்களிக்க (இது)

வனத்தில் சீதை இருக்கின்றாளா தனியிருந்து
நினைத்து நினைத்துத் தளர்கின்றாளா ஆவல்மிகுந்து
மனத்தோடும் வார்த்தைபுகன்றாளா உந்தனைக்கண்டு
மெனைத்தான் காணேமென்றுநொந்தாளாஎனவினவி
எழுந்து விழுந்து கனிந்து சினந்து
மனந் துணிந்து
கடந்து தொடர்ந்து அடர்ந்து படர்ந்து நடந்து
திருவணையொன்று
கட்டி லங்கையதை யொட்டி சுக்ரீவனொடு
கிட்டி மேடையி லிருந் தெட்டிக் காலால்முடியைத்
தட்டி விடராவணப் பட்டி தனக்குச்சின
மூட்டி துடித்துக் கச்சைகட்டி-காமாட்டி எனத்
தேர் பரி குடைவிருதொடு கொடிரதமிசையேற்றி
பள பள பளவெனவே
பேர்பெறுகரிபடை டங்கா டமார மணிசாற்றி
மள மள மள வெனவே
நேர்படப்பலகணை கனை எடுத்தவர் மீதுதூற்றி
வள வள வள வெனவே
சீர்கெடச்சேனை பொடிபடத்திகைத்தவர் போற்றி
தோற்றோடிப்போக

# பக்தியானந்தக் கேலிப்பதங்கள்.

இந்திரஜித்துகண்டு எழுந்துசினங்கொண்
நாகாஸ்திரத்தைப்பண்டு நாடி விடக்கட்டுண்டு
நற் கருடனும் விண்டு வந்திடப்பாணந்துண்டு

துண்டாய்ப் பறக்க

ஆவியுந் தெளிந்து சென்று
பாவி யவனுடனே நின்று
தாவி யுத்தத்தில்மு யன்று
மேவியேசெய்குவோ மென்று

விஞ்சிடப்பிரமாஸ்திரத்தால் எஞ்சிடவதிலேசிக்குண்டு
துஞ்சிடயாவருங்கண்டு அஞ்சிடஅனுமான்மனம்
நஞ்சிடச்சஞ்சீவியாலே மிஞ்சிடவதுசமயம்

தம்பி யினாலே ராமன்
வெம்பிக் கோபக் கிளைகள்
சிம்பிக் கண்கள் சிவந்து
கும்பி ராமபாணத்தை
நம்பித் தொடுத்தெதிர்த்து

அங்குராம விங்குராம னெங்குராம னாகநின்று
சிறிதுசிறிதைக்கொன்று பெரிதுபெரிதைக்கொன்று

அடித்து ராவணனை
மடித்து உதிரசிரம்
பொடித்து விபீடணர்க்குக்
கொடுத்துப் பட்டமதை

அடுத்துத் திட்டமுடன்
உழைத்தேதேவியை யழைத்தே
மனது களித்தே
திரேக பிளித்தே

விமானமேறி

கிடு கிடு கிடு வென ஒலிக்கவேபடை
விடு விடு வெனக் கெக் கெலிக்கவேகடல்
கடு கடு கடு வென ஜொலிக்கவேமடை
திடு திடு வென முறை பலிக்கவே

அதைத்தாண்டி

வந்தா சையுட னேனே
வனவாச மானநீ தானே
ரோசமில் லாமலே தரித்தாய்
நேச மொடு மருடந்தானே
அந்தமாமோ எந்தஉலகுமிது

சிந்தைதானே

சந்தச்சரபசண் முகதாஸனுரை
விந்தைதானே (இது)

———

## 48. முருகன் துதி.

வெண்ணிலாச்சூடிய நாதா என்ற மெட்டு

பல்லவி.

மா மணிப் போல் மரு மகன்
பூமியி லேபொல் லாதவன் (மா)

பாமரக்கூட்டத்திலே பழகிக்கொண்டாட்டத்திலே
ஏமன வாட்டத்திலே
ஏகி யூகி யோகி என்றிடவே (மா)

ஞானமில்லாதநேமி மானமில்லாத்தகப்பன்சாமி
கான மயிலேறும்நாமி
காணேன் நானே வீணனைப்போலே (மா)

அநியாயக் காரனையா அவனுக்கீ ராறுகையா
சன் யாசி அறுதலையா
தாதை மீது கோபமும் இலையா (மா)

பத்திமிகும் பாண்டிவாசன் பாவலர்க்குகந்த நேசன்
வித்தகன்சண் முகதாஸன்
விதமாய்ப் பதமாய் இதமாய் உரைத்தேன் (மா)

சந்தச்சரப சண்முகதாஸவர்களியற்றிய,

## விஷ்ணு துதி.

49. அரே சாதுமான் ஜாவுரே என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

ஜெய-நாரணா நாதபூத காரணா
நாரோ ராதிய னாேனனி னுள்வரை
நாதபூத காரணா-ஜெய (நா)

அநுபல்லவி.

பூரண ரூபவற் புத நித வித சித
புனிதனே புனிதனே புனிதனே புனிதனே
பொற்பதமருள் சிற்பரானீயே
கற்பக மெனு ளூற்பவ-ஜெய (நா)

சரணம்.

ஆபாச மோசமீ தரு வொரு கரு வுரு
அடைந்தேன் அடைந்தேன் அடைந்தேன் அடைந்தேன்
அடியன் பிறவிக் கடலி லினமும்
அவதிப் படுதல் அறவருள்-ஜெய (நா)

மாதர்கள் போகமே மன மின கன மெண
மதித்தேன் மதித்தேன் மதித்தேன் மதித்தேன்
மருளை மடமை இருளைக் கடந்துன்
அருளைப் பெறுதற் கொரு புகலிடு (நா)

தேகஞ்சந் தேகம்பொய்த் திசை வதை தசை யிசை
தெரிந்தேன் தெரிந்தேன் தெரிந்தேன் தெரிந்தேன்
தேங்கித் தேங்கி எங்கு கின்றனன்
பாங்கு பெற்றிட ஈங்கருள்-ஜெய (நா)

சண்முக தாஸனித் ததி துதி பதி கதி
தருவாய் தருவாய் தருவாய் தருவாய்
சரணஞ் சரணங் கருணை புரியத்
தருணந் தருண மறிதற் கரிய (நா)

---

50. ஆயமுசே தரதோசி என்ற வர்ண மெட்டு.

இராகம்-தேசிகபியாக்-தாளம்-ஆதி.

மாதவனே கருணு ஓ மகிபா சகாபா
வாதனையா இன்னுஞ் சோதனையா-ஓ
மாயவனே பூ சகாபா (வா)

தொகையறு.

மாதர்மனை மயக்கமிதில் மதிமருண்டேன் இந்நேரம்-இம்
மதிமயக்க மறச்சிறக்க வரமருள்வ துன்பாரம்

பாட்டு.

வாசவனே கேசவனே மாமறைதே டும்பதனே
வாவா மனோகரனே மனதினிக்கு மற்புதனே

வாராதிது வரையும் வர்மம்செய்ய லாகுமா
வந்தாள்வைசண்முகனை வானவர் புகழும்நேமா
வாரீ வாரீ ஜானகி மணவாள ராமா (வா)

---

51. பியாம் பியாரி பனுவா என்ற வர்ணமெட்டு.

இங்கிலீஷ்நோட்டு-இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-ஆதி.

கருடன் மீதினில் வருவாய்-மே
லாம் பதந்தனைத் தருவாய்-நினைக்
கருதிக் கருதி வருந்தி யான்
காணனே காணனே காண்-என்
கண்களினாலே காணவந் தாலே
கண்ணியங் கண்ணியந் தான்-கதறினேன்
கதிதரவர அதிபரம்பர காரண நாரணனே-பலபல
கன்மவா பாசனை சண்முக தாஸனைக் காக்கு முதாரணனே (கரு)

## நிந்தாஸ்துதி ராமாயண அந்தாதிக்கீர்த்தனம்.

ராகமாலிகை.

52. அப்பா பழனிமலை நாதா என்ற வர்ணமெட்டு.

இராகம்-சகானா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ராமா இப்படிச்செய்யலாமா-இது
ராவண சம்மார மாமா
பூமா புகழும்பரந் தாமா-நினைப்
பொருந்தபகீர்த்திவீண் போமா ரா)

## பக்தியானந்தக் கேலிப்பதங்கள்.

### விருத்தம்.

போமாவிப் பாவஞ் சார்ந்த பூமியின் பாரந் தீர்க்க
ஆமாம்ஸ்ரீ தசர தன்றன் அரும்பெரும் புதல்வ னாகிச்
காமாதி மலங்க டந்த கௌசிகர் பின்னே சென்றுங்
கேமா றி எதிர்த்துப் பெண்மே லெரிசரமெறிந்த தென்னே

என்னேநீயாண்பிள்ளை இல்லையா-தேர்ந்தோர்
ஏழைப் பெண்ணை வதைத்தல் மலையா
பெண்ணாகமிதித்ததுஞ் சிலையா-சாபம்
பேதை அகலிகைக்கு கிலையா ([illegible])

### கலித்துறை.

நிலையாது முற்றி நெடுபோரி லிற்று நெறிந்தவில்லை
உலையாது பற்றி யொடித்ததிஃதென்னையோவியமோ
கலையாவுஞ் சற்ற சனககு மாரியைக் காதலன்பின்
விலையாகப் பெற்ற கலியாண மிக்க விமரிசையே

விமரிசை யர்கவரும்போது-கண்டு
வெருண்ட பரசுராமன் மீது
சமசரந் தொடுத்தும்வி டாது-பின்னர்
தாங்கி மன்னிப்புத்தந்த தேது ([illegible])

சந்தச்சரப சண்முகதாஸவர்களியற்றிய,

## ஆசிரியம்.

எதேது நீதமு மிகம்புகழ யோத்தினக
ரேகமகு டந்த ரித்

திருந்தரசு புரியப்பெ ருந்தகைய தந்தையு
மியம்பு மொழிகையத் தடுத்துப்

பேதையொரு கைகேசி பேதித்து ரைத்தமொழி
பேணிச்சி ரம்வ குத்துப்

பெண்டிரும் மற்றுமென் பெறறதாய் சுற்றமும்
பின்பற்றி யேயி ரங்கக்

கோதுகுழ லீயிளங் குமரியாஞ் சனகியைக்
குணமுளவி லக்கு மணனைக்

குறைசெறியு மடர்வனங் கூட்டியே சென்றனை
கொடிதுமினி வேறு முண்டோ

நீதித மட்டுமோ இன்னும்யான் செப்பவோ
செப்பிலென் மனமொப் புமோ

தேவர்முத லரனுப தேடுதற் கரிதாய
தேசோமயாளந்தமே

அனந்த மாயரண்யத் தேக-இதை
அறிந்து சோகித்துத் தந்தைசாக
பேணந்தத் தாய்விதவை யாகக்- கண்ணீர்
பெருகிப் பரதன்மனம் வேக (ரா)

## சந்தவிருத்தம்.

வேகமதாகவ னேகவினைத்தொடு வேதமொழிப்பரதல்
வேதனையுற்றுடன் மாவனமுற்றனைவேண்டிமிகப்பணிந்து
சாதகமாகவ யோத்தியில்வந்துநீ தார்முடிபெற்றிடெனச்
சாதனையா:கவே பாதுகை தந்துநீ தானரசாள்வதுவே
சேக்ரமாமெனத் தேறுதல்செப்பியே செல்லவனுப்பினையால்
தேவர்கடம்மிலு மியாவருனையொரு தெய்வமெனத்தொழுவர்
தேகவியோகம தாகியதந்தைக்குச் செய்கடன்செய்தனையோ
தேடிநீகாண்பதற்கோடினையோபெருஞ்செய்கையிற்செயலிஃதோ

இஃதோ தந்தைக்குச் செய்யும் நன்றி-அவர்
இறந்ததின் காரணம்நீ யன்றி
எஃதோ சொல்லாங்கு மனம் குன்றி-டாம
விருந்தையே யிவிரக்க மின்றி (ரா)

## அறுசீர் கழி நெடிலடி.

இன்றியமை யாதவகை இளையபிரா
னியற்றுபன்ன சாலையேகிச்
சென்றிருந்த சிலகாலில் திருவடியைச்
சேருதற்குத் தேடி வந்து
நன்றிசைத்த சூர்ப்பநகிநங்கையொடு
நலப்பேசி நலிந்து வாட
வன்றிறலில் மூக்குமுலை வாங்குவித்த
வழியிழைத்தாய் வம்பு தானே

சந்தச்சரப சண்முகதாஸவர்களியற்றிய,

வம்பை நீயேவலிய வாங்கிக்-கொண்டு
வந்ததென்செய்வதெனத் தேங்கித்
தெம்புக்கிடமுமிகுத் தோங்கி-வெற்றி
சிறந்தகோதண்டங்கையில் தாங்கி

எண்சீர்கழி நெடிலடி.

தாங்கிவந்த சூர்ப்பனகி அழுது கொண்டு
தன்னுடனே பிறந்தகர தூஷ ணன்முன்
ஏங்கிமுலை மூக்கறுத்த செய்தி சொல்ல
எவனிவ்வா றிழைத்ததென எதிர்த்தகாலை
நீங்களண்ணன் தம்பியிரு பேரு மாக
நின்றரிய போர்புரிந்து கிட்டே ரம்மாய்
ஆங்கவரைச் சங்கரித்தீர் கோடி பேர்கள்
அரக்கரவ ரோடிறந்தார் அந்தோ பாவம்

பாவம் பின் சூர்ப்பனகிசென்று-அடி
பணிந்துராவணன் முனம் நின்று
கூவி யழுதனள்மு யன்று-நங்
குலத்துக்கே குறையீஃதென்று (உஉ)

சந்த விருத்தம்.

என்றேயவ ளழுதாளுட னிதுராவண னறிந்தான்
குன்றேஎனப்புகல்மார்பினன் குறையீதெனத் தெரிந்தான்
இன்றேநீசொ லெவன்செய்ததிங் கெவனுயினு மவனைக்
கொன்றேயினி மீள்வேனெனக் குதித்தான் மனம் பதைத்தான்

## பக்தியானந்தக் கேலிப்பதங்கள்.

பதைத்தான் மாமனிடம் வந்து-மான்போல்
பார்வனஞ் செல்லப்பணி தந்து
துதித்தான் கேட்டுமாரீசன் நொந்து-பின்னர்
துணிந்தனன்விதியைநன் கறிந்து (ரா)

### வேறுசந்த விருத்தம்.

அறிந்து கொண்டவ னனதினால்மிக அழகான
அமைந்தமானுரு வாகியேசானகி மனம்பேணத்
தெரிந்து சாடியு மோடியு மாடியுந் திரிவானைச்
சிறந்த மானென வேயெணி நீயதன் பினரேகப்
பரிந்த தம்பியும் மாயமி தாமென உணராதே
பறந்து சென்றனை யேயது ஞாயமோபகர்வாயே
செறிந்த மாதவ னாகிய மாரிச னுயிர்மாளச்
சினந்து பாணமொன் றெய்தனை யேதிறச்செயலாமா

ஆமாநீபெண்புத்தியைக் கேட்டு-தம்பி
அறிவித்ததையும் விட்டுப் போட்டு
ஏமாந்தோர்மான் பிடித்தல் மாட்டு-சென்றங்
கிசைந்துதேடிய தென்னோ தேட்டு (ரா)

### விருத்தம்.

தேட்டெடதோதேடுவான்போல் தேவியைவிடுத்துச்சென்ற
கேட்டினா லன்றோபொல்லாக் கெடுமதி இலங்கைவேந்தன்
தாட்டிகன் காவல் செய்யின் தம்பியைப் பிரிய வைத்துக்
காட்டுறு சனகிதன்னைக் கவர்ந்தனன் சமர்த்தாய் மாதோ

சந்தச்சரப சண்முகதாஸவர்களியற்றிய,

மாதோ கதறி அழும் போது-வழி
மறித்தசடாயு னெடு வாது
சூதோடு செய்தி றகின் மீது-வெட்டித்
துணித்துவிட்டோடினன்பே சாது (ரா)

அகவற்பா.

சாதுவின் தம்பி சனகியின்வாக்கால்
பேதகமுற்றுப் பிரிந்துனைத்தேடி
வந்துசந்தித்த வழியினிற்கண்டு
சிந்தைமயங்கித் தியங்கியிதேதோ
மோசமாயின்று முடிந்ததேயென்னப்
பாசமேகொண்டு பன்னகசாலைப்
புக்கினீநோக்கிப் பூவையைக்காணுய்

காணுய்நீஎங்கெங்குமே தேடி-மனங்
கனிந்து சடாயுவிடத் தோடி
வாணுள்முடித்துறவு மாடி-மோக்க
வரமளித்த னையருள் கூடி (ரா)

விருத்தம்.

கூடிச் சிறிய் தந்தையெனக் குலவி [ இலகு தசமுகனுல்
வாடிச்சனகிசிறைபுகுந்தவகையும்வழியும்வகுத்துரைத்து

பாடிப் பணிந்த சடாயுபுகப் பதமுமருளிக் கிட்கிந்தை
காடியனுமன் வரவேற்று நண்ணியுதவி நல்கினை மால்

மால்கொண்ட சுக்ரீவனுக்காக - ஒரு
மரத்தில் மறைந்து வாலி சாக
வேல்கொண்டெறிந்தனையே யூக-சாத்ர
விபுணனும்நீயோசொல்மெய் யாக

எண்சீர்.

யாகம்பல செய்துகினை ஈன்றதந்தை
யானையென ரிஷிமகவை யந்நாள்கொன்றான்
தேகபல திடசூர வாலிதன்னைத்
தெரியாது மறைவாய்நீ இந்நாள்கொன்றாய்
சாகுங்கால் பின்னையவன் கேள்விகேட்கச்
சரியான ஞாயவிடை தந்தாயில்லை
ஏகமாய்ப் பாடிவைத்தரர் வான்மீகருமெம்
இன்னிசைக்கம் பருமிவர்பாட்டென்னபாட்டே

பாட்டிலிலக்குமண ரேதோ-விடை
பகர்ந்தன ரென்பதுவுந் தோதோ
காட்டில் வானராதிபர் மீதோ-பலங்
காட்டுவதிது தெரி யாதோ (எா)

சந்தச்சரப சண்முகதாஸவர்களியற்றிய,

## ஆசிரியம்.

பாதோநீ வாலியோர்கு ரங்கென வெண்ணியே
யாங்கவனைக் கொன்று விட்டாய்
அவனண்ட கிட்கிந்தை யரசைச்சுக் ரீவனுக்
கபிராய மாக ஈந்தாய்
தீதாக அனுமனைத் தென்னிலங் கைசென்று
தீயிட்டு வரவிசைத்தாய்
தீரமாய்க் கடலூடு செல்லஅணை கட்டியே
சென்றுடன் போர் தொடுத்தாய்
ஏதோநீ பெருங்காரி யஞ்செய்வ தாயெண்ணி
எல்லோரையும் மடித்தாய்
இந்திர ஜயித்தென்ன கும்பகர் ணனுமென்ன
இராவணேஸ் வரனு மென்ன
சூதாக இவருந்தொ லைந்திடவ தைத்தாய்நீ
சொன்னசொல் தவறு மைபோல்
சூட்டினுய் பொன்முடிவி பீடணன் தன்னவே
சொல்லிலீ தறமா குமோ

ஆகும்மோ வல்லரக்கன் கூட்டிச்-சென்ற
அறிவையைத்தீயிற்குளிப்பாட்டி
நீகொண்டணைத்த தென்ன மீட்டி-இது
நிந்தைக்கிடம் நீ யொரு கோட்டி (ரா)

# பக்தியானந்தக் கேலிப்பதங்கள்.

## விருத்தம்.

கோட்டிநீ என்றே குவலய முற்றுனைக் குறைகூறத்
தாட்டிக ;நன்றே தனிநக ரடைந்துபின் தலைமாறி
நாட்டினில் நின்றே நவிலுவர் வசையென நனிசிதை
காட்டினிற் சென்றே கவலுற விடுத்தனை கருதாதே

தாதே ஜனகிதனித் தேகி-மனந்
தயங்கித்தவித்துயானோர் தேகி
சாதேகின்சார்பெனவி வேகி-புகல்
தந்தருள் செய்தனர் வான் மீகி (ரா)

## கலி விருத்தம்.

வான்மீகி அன்னைமுனம் வந்தருளா ராகில்
கான்மீது சென்றவடன் கதியென்ன வாமாம்
வான்மீது நின்றமரர் வாழ்வுபெற வைத்த
தேன்மீது நின்றமலர்ச் சேவடிப்பொற் றாளா

தாளாது ரைத்தமுறை கேட்டு-இனி
சண்முக தாஸன்துய ரோட்டு
நாளாகு தின்றே யருள் நாட்டு-நின்
நாமமந் திரமெனக் கூட்டு (ரா)

சந்தச்சரப சண்முகதாஸவர்களியற்றிய,

மைத்தூம் பியாரி தோரி என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம்-சிந்துபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏதோஎன் மீதிப்படி வாதோதொடுப்பதுனக்
கென்னே மனமிரங்க வில்லையா (ஏ)

அநுபல்லவி.

இல்லையா சொல்லையா அல்லையேல் தொல்லையா (ஏ)

சரணம்.

சாதனைசெய்வதோநின் தொழிலாச்சு-இந்தத்
தாரணி தனக் கிதோ ரிழிவேச்சு- பந்த
மாதர்மயக்கத்தேஎன் மதிபோச்சு-என்னை
மருளவிடுத்தால்வரும் வசைப்பேச்சு-இனி
மாதவா ஆதவா போதுபோக் காதவா (ஏ)

தொன்றுதொட்டுநம்புமெனக்கென்னபோக்கு- பதந்
தொந்த மூட னருளாதற் கேது சாக்கு- நல்ல
தண்டமி ழிசைத்திடு சண்முகன் வாக்கு-சங்கம்
தங்கு மதுரைத் தலம்வந் தெனை நோக்கு-நின்
தஞ்சமா மஞ்சொலி கஞ்சத்தா ளஞ்சலி (ஏ)

## பக்தியானந்தக் கேலிப்பதங்கள்.

முத்ரே.

இசைத்தமிழினும் இயற்றமிழினும்
இலக்கணஞ்செறி நாடகத் தமிழினும்
விசைக்கு நூறு கவிமழை பொழிந்திட
வித்துவ சண்முக தாஸனுக் கருளிட (ஏ)

### கோபாலகிருஷ்ணன் துதி.

தஸ்குமாரேது என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி

கோபால கிருஷ்ணனொரு கோகுல பாலன்-எங்கள் (கோ)

அநுபல்லவி.

பூபாலவதரித்த பூசுரருந்துதித்த
பூமான் தமிழ்ப்படித்த புலவர்களால் கதித்த
புண்ணியப் பேரான்- புவி
புகழ்ந்திடு சீரான்- கல்வி
நண்ணிய கூரான்-கூடல்
நகரெனு மூரான்- கமழ்
போதெனு மலரப் பூவிருந்திடு
மாதெனுந்திரு மார்புறைந்திடு (கோ)

சரணம்.

வந்தவரைக்காத்திடுவான் வஞ்சகரைஏய்த்திடுவான்
வந்தகம்பெருத்திடுவான் வாக்குறுதிவைத்திடுவான்

சந்தச்சரப சண்முகதாஸவர்களியற்றிய,

வாழ்விற் குபேரன்-பார்க்கும்
வழங்கு முதாரன் -தக்க
பேழ்மிகு சாரன் -உலகிற்
பெரும்பணக் காரன் -வீணே
வாதிடுவரை வாதில்வெல்லுவன்
சாதுக்களுக்கோ சாதுநல்லவன் (கோ)

சண்முகதாஸனுக்கும் தண்டமிழ்ச்சார்பினர்க்கும்
சடையப்பவள்ளலெவர்க்கும் தகுந்தபொருள்கொடுக்கும்
தாட்டிகக் கொடையான்- தயவு
தாட்சண்ய முடையான்-அருள்
கூட்டிடச் சடையான்-சாந்த
குணமுள நடையான்-தேவ
தாருக்குமிவன் தான்மிகுந்தவன்
யாருக்கு மிக வாய்த்தெரிந்தவன் (கோ)

---

## முருகன் துதி.

பொன்னுலவும் பன்னிருகை வேலா என்ற வர்ணமெட்டில்

வேறு புதுமைச் சந்தம்.

இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பேர்பெறுசெந் தூர்முருகத் தேவா-சிவ
ஞர்மகிழு மாமகவே வாவா-இந்தப்

பேதபுவன மாயமுழுதும் பேசுமறைக ளாயமுழுதும்
பேண நின்ற மோனமென்ற மூர்த்தியே-மானச்
சீர்த்தியே-ஞானப் பூர்த்தியே-உமைப்
பெண்டுதந்த பண்டுகந்த சீர்த்தியே (பே)

பார்தனிலென் னூர்வினையி னாலே-கரு
வூர்புகுந்திவ் வாறுவந்திப் பாலே-சிறு
பருவமங்கையர் உருவமேகதி தருமெனத்தினம் மரிவினன்விதி
பாடுபட்டுக் கேடுகெட்டோர் வீட்டையே-கட்டிப்
போட்டையே-நின்றேன் பாட்டையே-என்னைப்
பந்தபாசத் தொந்தம்விட்டு மீட்டையே (பே)

கிள்ளுதினை வள்ளிதனைக் கண்டு-கானில்
உள்ளபடி கள்ளவுருக் கொண்டு-முன்பு
கெஞ்சிக்கெஞ்சிப் பிணக்குவித்தனை வஞ்சமானினக்குமித்தனை
கெம்பிரமோ சம்ப்ரம ஒய்யாரனே மயில்
வீரனே-நல்உ தாரனே-மறை
கேட்டெனைப்பா ராட்டிடு சிங்காரனே (பே)

கொள்ளையிடு பிள்ளைமனைப் பாந்தப்-பெருஞ்
சள்ளையிலே தள்ளுகிற காந்தப்-அந்தோ
கொடுமையிஃதினில் கடுமையஃதற அடிமைத்தொழிலினில்
மடமையடைகிறன்
கொஞ்சமேனும் நெஞ்சிரங்காச் சாதனை-ஏனிச்
சோதனை-யார்சொற் போதனை-எனைக்
கொண்டணைத்தா லண்டிடாதுவாதனை (பே)

கூர்வடிவே லோர்கரங்கொண் டோனே-பல
சூர்மடியப் போர்வலங்கண் டோனே-விரி
கோதிலாமரை யேபொருந்துநின் பாதபங்கய மேதகுந்ததேன்
குற்றங்குறை முற்றும்பொறுத் தாதரி-எங்கள்
ஸ்ரீஹரி மருகா தெரி-ஜெயங்
கூறிமயி லேறிவாஇ தேசரி (பே)

சன்மமெனுங் கன்மவினை போக்கு-இந்தத்
துன்பமென இன்பமேயுண் டாக்கு-சந்தச்
சரபவழியினி லருமையடைகிற அரியதமிழினுக் குரிமையடைகிற
சண்முகதா ஸன் துதிக்கிப் போதையா-இரங்
காதையா - செய்வ தேதையா-சோலி
சாற்றிடுவாய் போற்றுமுருகா மெய்யா (பே)

நன்னபியா ராரே என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம்-தேசிக தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சண்முகா சார்ந்தெனைக் காவா
விண்மகா வேந்தற்குந் தேவா (சண்)

அநுபல்லவி,

கன்மபாசங் கதித்தேன்
கருக்குழியே யுதித்தேன்
தின்மையே சேகரித்தேன்
தேடித்தேடி மூடியே வைத்தேன் (சண்)

காணிலே காய்த்தமலம்
கடந்துபோ மிச்சடலம்
வீணிலே வேண்டபலம்
வேத மோதுன் பாதமே நலம் (சண்)

போதும்போ தும்மிப்பாடு
புகழெனக் கென்னகேடு
நீதுணை நீதியோடு
நேமனே நின் மாமயி லூடு (சண்)

சொற்களே ளுதோசெவி
சுற்றிசுற்றி நீயுதவி
தற்கமே னுபதவி
தாநீ வாநீ மான வேபுவி (சண்)

பட்டவென் பாட்டுக்கூலி
பகுந்துமின் பாருன்சோலி
நட்டணை யானகேலி
நாளு மாமண் மேலருள் பாலி (சண்)

பற்றிநின் பாதபாக்யம்
பதந்தர வேசி லாக்யம்
கற்றசண் முகன் வாக்யம்
காதி லேறு தீதென யோக்கியம் (சண்)

---

## மங்களம்.

இராகம்-சாவேரி-தாளம்-அடை.

### பல்லவி.

மங்கள மங்களமே யாதும்
வல்ல கணநாதர் மாமல ரடிக்கு (ம)

### அநுபல்லவி.

சங்கரி வாணி சரஸ்வதியாளுக்கும்
சர்வலோக மதையுண்ட ராமனுக்கும் (ம)

### சரணங்கள்.

சத்தி பார்வதியுமா மகா தேவிக்கும்
சாலோக சாரூப சாயுச்சிய பரனுக்கும் (ம)

எத்திசையும்புகழ் சத்திவேலர்க்கும்
இன்பஞானமுள்ள சித்தர்கள்யாவர்க்கும் (ம)

அந்தமான நாவலர் பாவல ருக்கும்
சந்தச்சரபத்தமிழ்ச் சண்முகதாஸ னுக்கும் (ம)

## அவையடக்கம்.

### வெண்பா.

தேனடக்க மாமொழியால் தெய்வமொரு தூதாகத்
தானடக்க வைத்த தமிழ்நாட்டில்—பானுமொரு
பத்திப்பா மாலை பகர்ந்த விதமானமை
அத்திக்கு முன்னடக்கு மாறு.

முற்றிற்று.